வந்தேமாதரம்

ஜானகியின் மறுவிவாகம்

அல்லது

காதலனைப் பெற்ற மங்கை.

விதவா விவாகத்தை வற்புறுத்தும் இனிய நாவல்.

வட ஆற்காடு,

சத்தியவிஜயநகரம், ஸ்ரீ. R. சீனிவாஸன்

எழுதியது.

'மார்க்கண்டன் பிரஸ்' சொந்தக்காரர்

ஸ்ரீ. K. முருகேச முதலியார் அவர்களால்

வெளியிடப்பெற்றது.

ரிஜிஸ்தர் காபிரைட்] 1932 [விலை அணா 3.

நவீனகதர் புத்தகசாலை, இரங்கூன்.

வந்தேமாதரம்.

ஜானகியின் மறுவிவாகம்

அல்லது

காதலனைப் பெற்ற மங்கை.

விதவா விவாகத்தை வற்புறுத்தும் இனிய நாவல்.

வட ஆற்காடு,

சத்தியவிஜயநகரம், ஸ்ரீ. R. சீனிவாஸன்

எழுதியது.

'மார்க்கண்டன் பிரஸ்' சொந்தக்காரர்

ஸ்ரீ. K. முருகேச முதலியார் அவர்களால்

வெளியிடப்பெற்றது.

ரிஜிஸ்தர் காபிரைட்] 1932 [விலை அணா 0—3—0

" MARKANDAN PRESS '
Fine Art Colour Printers and Hair Oil Box,
Soap Box Makers,
357 MINT STREET, MADRAS.

முகவுரை

செந்தமிழ்ச் செல்வர்காள் !

நமது வைதிகர்கள் எவ்வளவுதான் தங்கள் ஆசாரங்களையும் பழக்க வழக்கங்களையும் பற்றிப் பெருமை பேசிக் கொண்டபோதிலும் நமது பரிசுத்தமான ஹிந்து மதத்தில் பல குற்றங் குறைகள் மலிந்து கிடக்கின்றன என்பதை மகாத்மா காந்தியடிகள் போன்ற உண்மையாளர்கள் உணர்ந்திருக்கின்றனர். அத்தகைய குற்றங் குறைகளைக் களைந்து நமது மதத்தைப் புனிதப்படுத்தவேண்டியது மதாபிமானிகளின் கடமையாகும். நாம் இவ்வளவு கேவலமான நிலைமைக்கு வந்துவிட்டதன் காரணங்களுள் தீண்டாமை, பிறப்பினால் ஜாதி வித்தியாசம், பெண்களின் தாழ்த்தப்பட்ட நிலை ஆகிய இவை மூன்றுமே முக்கியமானவையாகும். மாதர்களின் துயரம் தீர்ந்து, அவர்களின் கண்ணீர் துடைக்கப்பட்டாலொழிய நாம் எவ்வகையிலும் அபிவிருத்தியடையப்போவதில்லை. பாலிய விவாகம், விதவா விவாகமின்மை, சொத்துரிமையின்மை முதலிய பல துயரங்கள் அவர்களை அல்லற்படுத்துகின்றன. "பாலிய விதவைகளைக்காண என் மனம் பதறுகின்றது. ஆடவர்கள் தங்கள் மனைவியரை இழந்தவுடனேயே வேறொரு பெண்ணை மணந்துகொள்ளும்போது சிறுபெண்களைமட்டும் விதவைகளாக்கி இக லோக நரகத்தில் அவர்களை ஆழ்த்தும் கொடுமையை நான் வெறுக்கிறேன்" என்று மகாத்மா கூறியிருப்பதுபோல் நம் நாட்டில் எண்ணிறந்த பால்ய விதவைகள் கண்ணீர் விடுவதையும், பெருமூச்செறிவதையும் காணச் சகியாமல்

விதவா விவாகத்தின் அவசியத்தை வற்புறுத்தவே, பிடிவாத குணமுடைய வைதிகர்களின் மனத்தையும் மாற்றக் கூடிய வகையில் இச்சிறு நூலை எழுதி முடித்திருக்கிறேன். சுமார் ஏழெட்டு வருஷங்களாகவே இப்படிப்பட்ட நூல் ஒன்றைஎழுதி வெளியிடவேண்டுமென்னும் ஆவல் எனக்கு அதிகமாய் இருந்தும் இதை வெளியிடக்கூடிய காலத்தை எல்லாம் வல்ல இறைவன் இப்போதுதான் கூட்டுவித்தருளினான். இதில் தற்காலத்திற்கேற்ற மற்றும் பல உபதேசங்களும் இடையிடையே புகுத்தப்பட்டிருக்கின்றன.

நலிந்து கிடக்கும் சமூகத்திற்குச் சேவை செய்ய வேண்டுமென்னும் தூண்டுதலினாலேயே இதை எழுதத் துணிந்ததால் தமிழ் நாட்டுச் சகோதரர்களும், சகோதரிகளுமான அன்பர்கள் எனது நோக்கத்தைமட்டும்ஆதரித்து இதிலுள்ள குற்றங் குறைகளை க்ஷமித்து இந்நூலைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென்றுகேட்டுக்கொள்ளுகிறேன். நாட்டில் விதவா விவாக அனுஷ்டானம் அதிகப்பட்டுப் பாலிய விதவைகளின் துயரம் நீங்குமாயின் அதுவே எனக்களிக்கப்பட்ட பிரதி உபகாரமெனக் கொண்டு திருப்தியடைவேன். இந்த அவசரமும், அவசியமுமான ஆசார சீர்திருத்தத்தில் நம் மக்களுக்கு உற்சாகத்தை அளித்தருள வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சென்னை,
10—6—1932

சமூக ஊழியன்,
R. சீனிவாஸன்.

ஜானகியின் மறுவிவாகம்
அல்லது
காதலனைப் பெற்ற மங்கை.

முதல் அத்தியாயம்.
தம்பதிகள் சம்பாஷணை.

சிவ க்ஷேத்திரங்களில் பிரசித்திபெற்றதும், ஆண்டு தோறும் கார்த்திகை விழாவை முன்னிட்டு லட்சக் கணக்கான யாத்திரீகர்கள் கூடுவதுமான திருவண்ணாமலையில்பிரபல வக்கீல் அருணாசலசாஸ்திரியார் மார்கழிமாதத்தில் ஓர்நாள் இரவு தனது படுக்கையறையில் சாய்வு நாற்காலியில் சாய்ந்தவண்ணம் பத்திரிகை படித்துக்கொண்டிருக்கையில், திடீரென்று 'அடி, சரசு; இங்கேவா' என்று மெதுவாகக் கூவி அழைத்துவிட்டுப் பின்னும் பத்திரிகை வாசிப்பதிலேயே கவனமாக இருந்தார். தன் கணவனையே தெய்வமாகக்கொண்டு அவரை வழிபடுவதே கோயில்பணி எனக் கருதிய உத்தமியாகிய சரஸ்வதியம்மாள் தன் கணவன் தன்னை அழைத்ததைக் கேட்டதும் அடுத்த அறையில் தன் ஏகபுத்திரியுடன் பேசிக்கொண்டிருந்ததையும் விட்டுவிட்டுக் கணவன் அருகில் வந்துநின்றாள். ஆனால் அவர் பத்திரிகை வாசிப்பதில் அதிக கவனமுடையவராயிருந்ததால் தன் பத்தினிவந்து நின்றிருப்பதைக் கவனிக்கவில்லை. சற்றுநேரம் காத்திருந்த பின்னர் அம்மாது, "எனது பிராணநாதா! நான் வந்து பத்துநிமிஷங்களாகிறதே. என்னைக் கவனிக்கமுடியாதபடி அந்தப்பத்திரிகையில்

என்ன இருக்கிறது? அந்த 'மதராஸ் மெயில்' பத்திரிகை யில் உங்களுக்கென்று தான் இவ்வளவு உற்சாகமிருக்கிறது அதோ பாருங்கள்! அடுத்தவீட்டு மத்வராயர் 'ஹிந்து' பத்திரிகையை வரவழைக்கின்ருர். எதிர்வீட்டு பாஷ்யம் ஐயங்கார் 'சுயராஜ்யா' படிக்கிருர். அந்த பத்மனுப நாயுடுவு மல்லவோ தங்கள் கட்சிக்குழைக்கும் 'ஜஸ்டிஸ்' வாசிக் கிருர். இந்தமெயில் பத்திரிகையில் என்ன இருக்கிறது? உலகம் போற்றும் உத்தமராகிய மகாத்மா காந்தியையும், காங்கிரசையும் குறைகூறுகிற பேப்பரல்லவோ அது? என்று எதேதோ சொல்ல முயன்றபோது வக்கீல் சாஸ்திரி யார் கோபமடைந்து, "அதெல்லாம் உனக்கென்ன? பெண் களுக்குச் சிறிது படிப்பு வந்தால் இதுதான் சங்கடம் என் போன்ற வைதிகர்களின் கட்சியை ஆதரிப்பது இந்த 'மெயில் பத்திரிகை தான். நீ வந்தவேலையைக் கவனி," என்ருர். அதற்கு அவள், "ஆமாம்! நாம் சீர்திருத்த மடைந்துவிட்டால் அப்பத்திரிகை நிர்வாகிகளின் வகுப் பினருக்குக் கஷ்டமல்லவா? ஆதலின் அவர்கள் வைதிகத் தை ஆதரிக்க வேண்டியதுதான். நான் வந்தவேலை எனக் கென்ன தெரியும்? தாங்களல்லவோ அழைத்தீர்கள்?" என்ருள். பின்னர் தம்பதிகளாகிய அவர்களிருவருக்கும் பின்வருமாறு சம்பாஷணை நடைபெற்றது.

சாஸ்திரியார்:—நமது குழந்தை ஜானகிக்கு வயது பன்னிரண்டு ஆகிறதே; அவள் புஷ்பவதியாய் விட்டால் என்னசெய்வது? விரைவில் விவாகத்தை முடித்துவிட வேண்டாமா? நீ என்ன அதைப்பற்றிக் கவலையில்லாமல் இருக்கிருயே? அது விஷயமாய் யோசிப்போமென்றுதான் கூப்பிட்டேன்.

மனைவி:—கவலை என்ன? ஆர அமர யோசித்துத்தானே செய்யவேண்டும். அதுவுமல்லாமல் குழந்தை இப்போது தான் செகண்ட்பாரம் (ஆறுவது வகுப்பு) படித்துக்கொண்டிருக்கிறாள். ஏழாவது வகுப்பிலாவது தேறி விடட்டுமே என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

சாஸ்திரி:—என்னடீ! இப்படிப் பேசுகிறாய்? அதுவரையில் காத்திருக்க முடியுமா? இதற்குள் புஷ்பவதியாய் விட்டால் என்னகதி, அவள் படித்தவரையில் போதாதோ பரீட்சையில் தேறி எந்த உத்தியோகத்துக்குப் போகவேண்டும்?

மனைவி:—என்ன அப்படிச் சொல்கிறீர்கள்! நல்ல கல்வி கற்றவர்களெல்லாம் இப்படிப் பேசினால் நாம் முன்னேறுவதெப்படி? உத்தியோகத்துக்காகத் தான் படிக்க வேண்டுமா? உலக ஞானமும், மற்றத் துறைகளில் அறிவும் பெறுவதற்குக் கல்வி அவசியமல்லவா! அவள் குறைந்தது ஸ்கூல் பைனலாவது படிக்கவேண்டுமென்பது என் விருப்பம். தாங்கள் இப்படிச் சொல்வீர்கள் என்பதை யறிந்தே மூன்றுவது பாரத்திலாவது தேர்ச்சி யடையட்டுமென்று சொன்னேன். புஷ்பவதியாய் விட்டால்தான் என்ன? புரௌடா விவாகம் கூடுமென்று இப்பால் பல அறிஞர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்களாமே.

சாஸ்திரி:—சில தமிழ்ப்பத்திரிகைகளையும் புஸ்தகங்களையும் உனக்கு வரவழைத்துக் கொடுத்தது தவறாகப் போயிற்று. உலக ஞானமாவது? அறிவாவது! எழுதப்படிக்கத்தெரிந்தால் போதாதா? மேலும் புஷ்பவதியாய் விட்டாலென்ன என்று சொல்கிறாயே! உனக்கென்னடீ தைரியம்! நம் ஜாதியார் சும்மா இருப்பார்களோ? பகிஷ்காரம் செய்து

விடமாட்டார்களா? அன்றியும் அவ்வாறுசெய்வது ஹிந்து மத சாஸ்திர விரோதமும் பாவமும் அல்லவா?

மனைவி:— சாஸ்திர விரோதமுமல்ல, பாவமுமல்ல; ஹிந்துமத சாஸ்திர விரோதமானால் பிராமணர்களெனச் சொல்லிக்கொள்ளும் நாம்மட்டுமா ஹிந்துக்கள். பிராமணரல்லாதாரில் பெரும்பான்மையோர் புரௌடா விவாகம் செய்கிறார்களே. அவர்களுக்கென்ன பாவம் வருகிறது? அவர்களும் அப்படிச் செய்யக்கூடாதென்று தடுக்க வைதிகர்கள் அக்காலத்தில் ஏதேனும் முயற்சி செய்தார்களா? இன்னும் மலையாளம் முதலிய சில பிரதேசங்களிலுள்ள பிராமணர்களும் புரௌடாவிவாகத்தைச் செய்கிறார்களே? இதெல்லாம் வீண்கட்டுப்பாடு! பால்மணமாறாச் சிறுபெண்களை விவாகம்செய்து கொடுத்துவிட்டுப் பலவந்த வாழ்க்கையில் புகுத்துவது பாவமல்லவா? சிறுபெண்கள் குழந்தைகளைப் பெறும்படிசெய்வதாலும் அவர்களை விதவையாக்கி உட்காரவைப்பதாலும்தான் மிஸ் மேயோ போன்ற அந்நியநாட்டார் நம்மைப் பரிகசிக்கிறார்கள். நம்மிடமுள்ள குறைகளை நாம் நிவர்த்தித்துக்கொள்ள வேண்டாமா ?

சாஸ்திரி:—போதும்; போதும். உன்வாயை மூடு. கொஞ்சம் இடம் கொடுத்தால் தலைமேல் ஏறுகிறாயே, அதெல்லாம் உன்னைக்கேட்கவில்லை. அதிகப்பிரசங்கம் செய்யாதே; இனி இவ்வாறு பேசினால் எனக்குக் கோபம் வரும் குழந்தை விவாகத்துக் கென்ன செய்வது?

மனைவி:— நாதா! மன்னிக்க வேண்டும். ஏதோ என் புத்திக்குச்சரி என்று தோன்றியதைத் தங்களிடம் தெரிவித்துக்கொண்டேன். பிறகு தங்களிஷ்டப்படிசெய்ய நான்

காத்திருக்கிறேன். மனைவி யோசனை சொல்வதில் மந்திரி போல் இருக்க வேண்டுமாதலின் இதையாவது தெரிவித்தேன். தாங்கள் யாருக்குக் கொடுத்தாலும் எனக்குச் சம்மதமே.

சாஸ்திரி:— என் யோசனை ஒருபக்கமிருக்கட்டும். நீ என்ன சொல்கிறாய்? யாருக்குக் கொடுப்போம்.

மனைவி:— வேலூரில் என் அண்ணன் மகன் சீனிவாஸன் இருக்கிறானே! அவன் எப். ஏ. வரையில் படித்திருக்கிறான். ஒரே பிள்ளை. என் அண்ணனும் இறந்துவிட்டதால் நம் பெண்ணை அவனுக்குக்கொடுத்தால் அவனே இங்குவந்திருப்பான். என் தாய்வீட்டு ஆஸ்தியும் இங்குள்ள சொத்தும் நம்மிடமே இருக்கும். குழந்தை ஜானகியும் இங்கேயே இருக்கலாம். இந்த விஷயத்தில் தங்கள் அபிப்பிராயம் என்னவோ?

சாஸ்திரி:—அவனா? அவனைப்பற்றி நீ தான் மெச்சிக்கொள்ளவேண்டும். அவன் இன்ட்டர்மீடியேட்டில் வாசித்துக்கொண்டிருந்த போதே நான் அவனுக்கு அமெரிக்கப் பாதிரிமார்களிடம் சொல்லி உபகாரச் சம்பளம் வாங்கிக் கொடுப்பதாயும், அவன் பீ. எ. வகுப்பு முடித்த பின்னர் இங்கிலாந்துக்குப் போய் சிவில் சர்விஸ் பரீட்சையில் தேர்ச்சியடையட்டுமென்று சொன்னேன். அவன் என் பேச்சை மதித்தானா? தந்தை செத்ததும் கேட்பாரில்லாதவனாய்ப் போய்விட்டான். ஆரம்பத்திலேயே அவன் தியசாபிகல் சொஸைட்டி என்றும், ஸ்கௌட் மூவ்மெண்ட் என்றும் கூத்தாடிக்கொண்டிருந்தான். எப். ஏ. வகுப்பில் தேர்ச்சியடைய முடியாமல் போனதும் இப்போது படிப்பதையே நிறுத்திவிட்டு ஏதோ காங்கிரஸ் கமிட்டிக்குக் காரியதரிசி

யாய் இருக்கிருனும்? அவனுக்கென்ன அது சாதம் போடு மா? அவன் கிடக்கிருன்.

மனைவி:—என்ன அப்படிச் சொல்கிறீர்! அவனுக் கென்ன குறை? ஏதோ எப். ஏ. பரீட்சையில் தோல்வி யடைந்தான். அதற்குமேல் படிக்க அவனுக்குப் பணமும் மனமும் இல்லை. இப்போதென்ன? பல பத்திரிகைகளுக்கு நியூஸ் ஏஜெண்ட்டாக இருக்கிருன். அதில் ஏதோ கிடைக் கிறது. நெல்மண்டி வைத்திருக்கிருன். அவனுக்கும் மாதம் இருநூறு ரூபாய் கிடைக்கிறதாம். சிறிது பூஸ்திதியும் இருக்கிறது. காங்கிரஸ் காரியதரிசியாய் இருப்பதால் ஊரில் நல்ல செல்வாக்கு. அதற்கென்ன செய்வது? தேசத் துக்கும் ஏதாவது தொண்டு செய்ய வேண்டாமா?

சாஸ்திரி:—அதெல்லாம் எனக்கு வேண்டாம். நான் என் தங்கை ராஜத்தின் குமாரன் பாஞ்சாபகேசனுக்குத் தான் கொடுப்பேன். அவள் புருஷன் நாராயணசாமி தஞ் சாவூரில் டெபுடி கலெக்டராக இருக்கிருன். பையனும் சென்னையில் எப். ஏ. படித்துக் கொண்டிருக்கிருன். அவ ளுக்கும் ஒரு பையன் ஒருபெண்தான் இருக்கிருர்கள். நாராயணசாமியும் நானும் சேர்ந்து பையனை அதிகமாகப் படிக்கவைத்து விட்டால் நல்ல உத்தியோகம் கிடைக்கும்.

மனைவி:—அதற்கு என்னைக் கேட்பானேன். தங்க ளிஷ்டப்படி செய்யுங்கள். என்னைக் கேட்டதற்காக என் மனதிலுள்ளதைச் சொல்லிவிட்டேன். மேலும் நமது ஜானகியும் சீனிவாசனிடம் தான் பிரியமுடையவளாய் இருக்கிருள். தங்கள் தங்கை புத்திரனையும் அவள் பார்த் திருக்கிருளே. அவளுக்கு இஷ்டமிருக்காது.

சாஸ்திரி:—அவளுக்கென்ன தெரியும் குழந்தை. அவளுடைய பிற்கால க்ஷேமத்தைக் கோரி நாம் தான் தக்க இடத்தில் மணமுடிக்க வேண்டும். ஆதலால் பஞ்சாப கேசனுக்கே கொடுப்பதென முடிவு செய்துவிட்டேன். நீ போய்ப் படுத்துக்கொள்.

இவ்வாறு தன் பெற்றோர்களிருவரும் பேசிக்கொண்டிருந்ததை அடுத்த அறையின் சுவற்றோரத்தில் நின்றுகொண்டு உற்றுக்கேட்ட ஜானகி, "ஐயோ! எனது தந்தை இப்படியா முடிவு செய்துவிட்டார். என் செய்வது? அவரை மீறிப் பேசினால் அவருக்குக் கோபம் வந்துவிடும். தலைவிதி யாரைவிட்டது. கடவுள் விட்டவழி ஆகட்டும்" என்று சொல்லிக்கொண்டாள். பிறகு அனைவரும் படுத்துறங்கி விட்டனர்.

இரண்டாம் அத்தியாயம்.

திருப்தியில்லாத விவாகம்.

மறுநாட் காலை வக்கீல் அருணாசல சாஸ்திரியார் தஞ்சை டெபுடி கலெக்டரான தன் மைத்துனர் மிஸ்டர் நாராயணசாமிக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதி அதில் அவருடைய குமாரன் பஞ்சாபகேசனுக்குத் தன் மகள் ஜானகியை ஏற்றுக்கொள்வதாயிருந்தால் தனக்கு மிக சந்தோஷமா யிருக்குமென்றும், அப்போது அவனை இருவருமாகச் சேர்ந்து இங்கிலாந்துக்கு அனுப்பிப் படிக்கவைக்கலாமென்றும், தன் தங்கை ராஜம் அதை ஒப்புக்கொள்வாளென அவர் நம்புவதாயும் அறிவித்தார். அக் கடிதத்தை ஆபீசில் கிடைக்கப்பெற்ற மிஸ்டர். நாராயணசாமி அன்று மாலை கிளப் முதலியவற்றிற்குப் போய்விட்டு இரவு ஏழுமணி

க்கு வீட்டுக்கு வந்ததும் தன் சேவகனிடம் அதைக் கொடுத்து மாடியில் இருந்த தன் மனைவி ராஜத்தினிடம் கொடுத்து விடும்படி கூறினார். அவனும் அதை எடுத்துச் சென்று மாடியில் ஒரு அறையில் உலகம்போற்றும் உத்தம ரான மகாத்மா காந்தியடிகள் தென்னாபிரிக்காவில் நடத்திய சத்தியாக்கிரகத்தைப் பற்றிய புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருந்த அம்மாதினிடம் கொடுத்துவிட்டான். உட னே தன் புஸ்தகத்தை மூடிவிட்டு அக் கடிதத்தைப் படித் துப் பார்த்தாள். தன் தமையனார் அவரது குமாரருக்குத் தன் பெண்ணைக் கேட்பதுபற்றி மிகச் சந்தோஷமடைந் தாள். உடனே மாளிகையிலிருந்து கீழே இறங்கிவந்து தன் கணவனைக் காணச்சென்றாள். இதற்குள் அவர் சாப் பிட்டுவிட்டுத் தன் அறையில் உட்கார்ந்து கொண்டிருந் தார். தன் மனைவியைக் கண்டதும் அவர் திடுக்கிட்டார். எனெனின் அவர் அப்போதுதான் தன் ஆசைக்கண்ணாட்டி யான தாசி கோமளம் வீட்டுக்குச் செல்வதற்குத் தயாரா யிருந்தார். ஆயினும் ராஜம் அவருடன் மிக மரியாதை யாகப் பேசிவிட்டுத் தன் தமையனாரின் கடிதத்துக்கு என்னபதில் எழுதுவதெனக் கேட்டாள். அதற்கு அவர் தனக்கு ஏதும் ஆட்சேபமில்லையென்றும், அருணாசல சாஸ் திரியாரின் யோசனையை ஒப்புக் கொள்வதாகவும் கூறித் தன் மருமகன் சௌந்திர ராஜத்தின் மூலம் கடிதம் எழு தும்படியும் கூறிவிட்டார். அருணாசல சாஸ்திரியாருக்குத் தன் தங்கை ராஜத்தினிடம் அன்பு அதிகமென்றாலும் அவ ளது கணவனான மிஸ்டர், நாராயணசாமி, இங்கிலாந்து செ ன்று திரும்பியவராதலால், காமம், கள் என்னும் பாதகச் செயல்களுக்கு அடிமைப்பட்டு விட்டிருந்ததால் சாஸ்திரி யார் தன் தங்கையின் குடும்பத்தைப் பகிஷ்கரித்து விட்டு

அவர்களுடன் எத்தகைய சம்பந்தமுமில்லாமல் இருந்தார். ஆனால் இப்போது தன் அவசியத்தை யொட்டி சாஸ்திரி யார் அவர்களுக்குக் கடிதம் எழுதவேண்டியதாயிற்று. இத ஞல்தான் ராஜமும் சாஸ்திரியார் கடிதம் கண்டதும் அளவி லா மகிழ்ச்சியடைந்தாள். கடைசியில் தன் கணவனும் அந்த யோசனையை ஒப்புக்கொண்டு விட்டதற்காக இன்ன மும் அதிக சந்தோஷமடைந்தாள்.

ஆகவே அவள் தன்மகள் கோகிலத்தினிடம் சொல்லி அவளுடைய கணவன் மூலம் சாஸ்திரியாருக்குப்பதில் எழு தும்படி செய்தாள். கடிதமும் மறுநாள் எழுதப்பட்டது. தஞ்சாவூரினின்றும் கிடைத்த கடிதத்தை எடுத்துக் கொ ண்டு நமது அருணசல சாஸ்திரியார், தமது குடும்பப்பு ரோகிதரான ஐயங்குளத்தெருவிலிருக்கும் அண்ண தீக்ஷ தர் வீட்டுக்குப்போய் ஒருசுபமுகூர்த்தம் வைத்துக்கொடு க்கும்படி கேட்டார். வக்கீல்வந்த அவசரத்தைக் கண்ட தீக்ஷதர் சற்று நேரம் ஏதோ ஒருபுஸ்தகத்தைப் புரட்டிவி ட்டுத் தைமாதம் இருபத்துநான்காம் தேதி சோமவாரம் கடகலக்கினத்தில் நல்ல முகூர்த்தத்தில் விவாகம் நடந்தால் தம்பதிகள் சாவித்திரி சத்தியவானைப்போல் என்றும் சிரஞ் சீவிகளாய் இருப்பார்களென்றும் தடபுடலாக ஏதேதோ கூறினர். இதைகேட்ட சாஸ்திரியார் அப்படியே நேராகத் தபாலாபீஸுக்குச் சென்று இவ்விஷயத்தைத் தஞ்சை குத் தந்தியடித்து விட்டுத் தமதில்லஞ் சேர்ந்து மனைவி சரஸ்வதியம்மாளிடம் விவரமனைத்தையும் கூறினர். இதைக் கேட்ட ஜானகி அதிக விசனமடைந்தாளேயாயி னும் பிதாவுக்கு மீறி ஒன்றும் செய்ய அவளால் முடியாமலி ருந்தது.

சாஸ்திரியார் மறுதினமே எல்லாச் சாமான்களையும் கொண்டுவந்துபோட்டுக்கலியாணத்துக்கு வேண்டிய சாமக்கிரியைகளைத் தயார் செய்யும்படி தம் மனைவிக்குக் கட்டளையிட்டார். தம்முடைய பந்துமித்திரர்களனைவருக்கும் தமது ஏகபுதல்விக்கு நடக்கப்போகும் விவாகத்துக்காக அழைப்புக் கடிதங்கள் எழுதினார். பற்பல ஊர்களிலிருந்தும் சாஸ்திரியார் வீட்டில் அவருடையபந்து ஜனங்கள் வந்து கூடினார்கள். சாஸ்திரியாரின் கக்ஷிக்காரர்களெல்லோரும் தங்கள் தங்களாலான உதவியைச்செய்தார்கள். சாஸ்திரியார் சன்னதித் தெருவிலுள்ள தம் வீட்டை அழகிய பந்தலினாலும் தோரணங்களாலும் அழகு செய்தார். முகூர்த்த நாளையும் சம்பந்தி வீட்டாரையும் எதிர்பார்த்திருந்தார். தம் கேஸ் கட்டுகளையெல்லாம் தம் நண்பர் சக்ரவர்த்தி அய்யங்காரிடம் கொடுத்து விட்டுப் பதினைந்து நாட்கள் கோர்ட்டுக்கு வரமுடியாதென்று முன்சீப்புக்கும் சொல்லி விட்டார். வீட்டில் யாவரும் சந்தோஷமாயிருக்கிறார்கள். ஆனால் மணப் பெண்ணுக்கு மட்டும் மனவேதனை பொறுக்க முடியவில்லை, தான் விரும்பிய சீனிவாஸனைக் கலியாணம் செய்துகொள்ள முடியவில்லையே; தந்தையாரின் கட்டாயத்துக்காக வேறு யாருக்கோ வாழ்க்கைப் படவேண்டுமே யென்னும் கவலை தான் அவளுக்கு அதிகமிருந்தது. விவாகத்துக்கு சீனிவாஸன் வந்தால் அவனுடனாவது எங்கேனும் வெளியேகி விடலாமென்று யோசித்தாள். ஆனால் அன்றுதான் சீனிவாசனிடமிருந்து தான் விவாகத்துக்கு வரச் சௌகரியமில்லையென்று வரையப்பட்ட கடிதம் வந்தது. ஆதலின் ஆண்டவன் விட்ட வழியாகிறதென்று சும்மா இருந்து விட்டாள்.

முகூர்த்தத்துக்கு முன்னாள் மாலையில் தஞ்சாவூரி லிருந்து மணமகன் தவிர மற்றவரனைவரும் வந்து சேர்ந்தார் கள். அவர்களுக்கென்று ஏற்படுத்தியிருந்த தனி மாடி வீட்டில் அவர்கள் இறக்கப்பட்டார்கள். அன்றிரவு கழிந்தது மறுநாள் முகூர்த்தநாளும் தோன்றிவிட்டது. காலை வண்டியில் மணமகன் பஞ்சாபகேசனும் தன்தோழன் ராமகிருஷ்ணனுடன் வந்து சேர்ந்தான். பஞ்சாபகேசனே கருநாகப்பழம்போன்ற சிவந்தமேனியை யுடையான். அதிலும் மேல்நாட்டு நாகரிகச் சேற்றிலப்படியே அழுந்தி விட்டவனாதலின் புல்சூட் போட்டுக்கொண்டு தலைமயிரைக் கத்தரித்துக் கிராப் செய்துகொண்டவனாய்த் தன் வாயில் சிகரெட்டுடன் வருவதைப் பார்த்தால் எவனோ கருப்பு துரையைப்போ லிருந்தது. வந்ததும் அவன் தன் பெற் றோர்கள் தங்கியிருக்குமிடஞ் சென்று, தன் தந்தைக்கு 'குட்மார்னிங்' என்று வந்தனஞ் செலுத்திவிட்டுத் தன் தோழனுடன் அவ்வூரிலிருக்கும் கும்பகோணம் காப்பி கிளப்புக்குப் போய்விட்டான். இதையெல்லாம் பக்கத்து வீட்டு மாடியின் அறையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த ஜானகி தனக்கும் இப்படிப்பட்ட மணாளன்தானா ஏற்பட வேண்டுமென்று தன் தலையிலடித்துக் கொண்டாள்.

அன்று காலை மணி எட்டுக்கெல்லாம் எண்ணெய் தேய்த்துக்கொண்டு குளித்தார்கள். இக் கலியாணத்துக் கென்று சப் ஜட்ஜ் அவர்களால் அழைத்துவரப்பட்ட தஞ்சாவூர் மேளக்காரர்கள் மிக அழகிய ஸ்வரத்துடன் மங் களகரமான நாதசுரம் வாசிக்க ஆரம்பித்து விட்டார்கள். புரோகிதர் அண்ணு தீக்ஷதரின் தடபுடலுக்குக் கேட்க வேண்டியதே யில்லை. சுமார் பத்துமணிக்கெல்லாம் முகூ ர்த்தம் ஆரம்பமாயிற்று. தீக்ஷிதர் தொட்டதற்கெல்லாம்

தக்ஷிணை எங்கே என்கிறார். பல உத்தியோகஸ்தர்களும் பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர். அன்று அருணாசல சாஸ்திரியின் இல்லம் இந்திரலோகமே போல் பிரகாசித்தது. மணமகன் மூக்குக்கண்ணாடியை யணிந்த வண்ணம் அடிக்கடி தன் நெற்றியில் வந்துவிழும் கிராப்மயிரை இடக்கரத்தால் தள்ளிக்கொண்டே மகா குதூகலத்துடன் ஆசனத்தின் மீது வீற்றிருந்தான். மணப்பெண் ஜானகியும் சற்று வாடிய முகத்துடன், "விதி யாரைவிடுகிறது; நான் இவனுக்குத்தான் வாழ்க்கைப் படவேண்டு மென்று கடவுள் விருப்பமிருந்தால் என்னால் தடுத்துக்கொள்ள முடியுமோ? அல்லது என்தந்தை கட்டாயமாக இதை முடிப்பாராயின் ஆண்டவன் தன்னிஷ்டப்படி இதை மாற்றிவிடுவான்," என்று சிந்தித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள், சரியாகப் பத்தரை மணிக்கெல்லாம் வேதியர் வேத கோஷஞ் செய்ய மங்களகரமான மேளவாத்தியத்தினிடையில் பஞ்சாபகேசன் தன்னை விரும்பாத ஒரு கன்னியின் கழுத்தில் தாலியை முடித்துவிட்டான். பிறகு எல்லோரும் வதூவரர்களை ஆசி கூறினார்கள். எல்லோருக்கும் சந்தனம் தாம்பூலம், தக்ஷிணை முதலியன வழங்கப்பட்டன. யாவரும் அருணாசல சாஸ்திரியார், மிஸ்டர் நாராயணசாமி ஆகியவர்களின் கொடையைப்பற்றிச் சிலாகித்துக் கொண்டே போனார்கள்.

சாஸ்திரியார் சிலரிடம் மட்டும் பிரத்தியேகமாகச் சென்று அன்றிரவு விருந்துக்கு வரும்படி அழைத்தார். இரவு நடந்த விருந்தைப்பற்றி இவ்விடம் வருணித்து முடியாது. சென்னையிலிருந்து வரவழைக்கப்பட்ட சுயம்பாகிகள் திவ்விய பதார்த்தங்களைத் தயாரித்து விட்டிருந்தார்கள். இரண்டு மூன்று நாட்கள் எல்லோரும் இருந்து

விமரிசையான விருந்து முதலான வேடிக்கைகள் நடந்த பின்னர் மூன்றும் நாள் கங்கண விசர்ஜனமும் செய்யப் பட்டு அன்று மாலை ஊர்வலமும் நடந்தேறியது. ஊரில் எல்லாருடைய வீடுகளுக்கும் சர்க்கரை வழங்கப்பட்டது. நான்காம் நாள் பிள்ளை வீட்டார் தஞ்சைக்கும் மணமகன் சென்னைக்கும் புறப்பட்டுச் சென்றார்கள்.

மூன்றும் அத்தியாயம்.

பகற் கொள்ளையும் படு கொலையும்.

சென்னை தங்கசாலைக் கருகிலுள்ள ராமகிருஷ்ணன் சந்தில் வசித்துவரும் தாசி வெங்கட்ரத்னம் என்பவள் சுமார் இருபது வயதுள்ள இளமங்கை. அவள் சுமார் இரண்டு மூன்று வருஷங்களாகத்தான் அவ்வீட்டில் வசித்து வருகிறாள். அவள் சித்தினி ஜாதியைச் சேர்ந்தவள். தேகத்திலும் கை, கால் முதலிய அவயவங்களிலும் அதிக மான ரோமத்தையுடையவள்; சதா பலவர்ணமுள்ள சேலைகளைக் கட்டிக்கொண்டு தலையில் புஷ்பத்தைச் சூடிய வளாய்க் கண் மையுடனும் புன்சிரிப்புடனும் புருஷசேர்க்கையில் அபரிமிதமான ஆவலுடனும் விளங்குவாள். அத்தகைய அவள் நமது பஞ்சாபகேசனுக்கு விவாகம் முடிந்த சுமார் இருபது நாட்களுக்குப் பின்னர் ஒருநாள் தன் சேவகன் சுப்பனிடம் பின்வருமாறு கூறினாள்:

“என்னடா சுப்பா! நான் இங்குவந்தது முதல்என்னிடம் மையல் கொண்டு என்னை விட்டுப்பிரியாமல் என்னை ஆதரித்து வந்த தஞ்சை சப்ஜட்ஜியின் குமாரர் இங்கு சிலநாட்களாக வருவதில்லையே; என்செய்வது? அவர்விவாகம் செய்து

கொண்டதுமுதல் இந்தப்பக்கம் திரும்பியும் பார்ப்பதில்லையே; வேறு யாருடைய காலை நான் இனிப்பிடித்துக் கொள்வது? நான்பரம்பரை வியபிசாரியாக இருந்தாலும் இந்தச் சூது வாதுகளெல்லாம் தெரியும். என்னை இவ்விடம் அழைத்துக் கொண்டுவந்த பக்கத்துவீட்டுப் பத்மாஸனியை யேனும் கூப்பிடு; ஏதேனும் யோசனை கேட்கிறேன்."

சுப்பன் உடனேசென்று பத்மாஸனியை அழைத்து வந்தான். அவள் மிகுந்த ஒய்யார நடையுடன் அங்குவந்து விஷய மென்ன வென்றுவிசாரித்தாள். அப்போது வெங்கட்ரத்னம், "நானும் இங்கு வந்து இரண்டு மூன்று வருஷங்களாக ஒருவரையே அண்டியிருந்து அவருடன் ஏதோ சுகமாகக் காலங்கழித்து வந்தேன். இப்போது அவருக்குக் கலியாணமானது முதல் இந்தப்பக்கமும் திரும்பிப் பார்ப்பதில்லையே; என்ன செய்வது?" என்றாள். உடனே பத்மாசனி "அக்கா ! இதற்கா பயப்படுகிறாய் ! நாம் நினைத்தால் நமக்கில்லாத பணக்காரப் பிள்ளைகளா ? அவன் போனால் போகிறான் கழுதை ; அவன் போனால் அவனைப் போல் ஆயிரம்பேர் நம்மை நாடி வருகிறார்கள். உனக்கு ஒன்றுந் தெரியாது. நீ என்ன பரம்பரை தாசியா ! மதுரைப் பாப்பாத்திதானே பாவம் ! உனக்கேற்ற பாப்பாரப் பையன் அகப்பட்டான் ; சுகமாயிருந்தாய். இப்போது தான் அவன் ஒழிந்தானே ; எங்களைப்பார் ! ஒரு நாளில் பத்துப்பேர் வருவார்கள். அவர்கள் எந்த ஜாதி மதமாயிருந்தால் எங்களுக்கென்ன ? வேண்டியது பணந்தானே ! ஒவ்வொருவரிடமும் 'நீ தான் என் காதற் களஞ்சியம்' என்று கூறுவோம். சரி ! உனக்கு வேறு ஏற்பாடு செய்கி

றேன். சிந்தாதிரிப்பேட்டையிலிருந்து ஒரு மைனர் ஜமீன் தார் வருகிறான். அவனை இங்கே அனுப்புகிறேன் என்றாள்"

அதைக்கேட்ட வெங்கட்ரத்னம் அவ்வாறே செய்யும் படி சொல்லியனுப்பிவிட்டுத் தன் மனத்துள் இவ்வாறு சிந் திக்கலானாள்: "என்னமோ என் தலைவிதி இப்படியாய் விட்டது. என்னைப் பதினைந்தாவது வயதிலேயே இப்படி யும் கைம்பெண்ணாக்கிப் பின்னர் இவ்வாறெல்லாம் அவஸ் தைப் படும்படியும் ஆண்டவன் செய்துவிட்டானே! வேறு வழியொன்றும் புலப்படவுமில்லையே! இறைவன் அருள் புரிந்து கூடிய விரைவில் ஏதேனும் நல்ல துறையைக் காண் பிக்கமாட்டானோ?" இவ்வாறு அவள் சிந்தித்தவண்ணம் விச னத்துடனிருந்தாலும் வெளிக்குத் தன்னை அலங்கரித்துக் கொண்டு மைனருக்காகக் காத்திருந்தாள்.

அன்பார்ந்த வாசகர்காள்! சாதாரணமாய்த் தங்கசா லைத் தெருவுக்கருகிலுள்ள அந்த இரண்டு மூன்று தெருக் களிலெல்லாம் இத்தகைய ஒழுக்கங்கெட்ட விலைமாதர்கள் இரவு மணி ஏழு அடித்ததும், மகா விகாரமாக இருப்ப வர்களும் தங்களை அலங்கரித்துக்கொண்டு தலையில் புஷ் பத்துடனும், முகத்தில் ஏதோ ஒரு விதமான பௌடருட னும், கண்ணில் மையுடனும், வாயில் தாம்பூலத்துடனும், ஒவ்வொரு வீட்டின் வாயிற்படியிலும் இருவர் மூவராக நின்றுகொண்டு அத் தெருக்களின் வழியே செல்லும் வாலிபர்களைக்கண்டு கைச்சரச வாய்ச்சரசங்கள் செய்வார் கள். இதனால் கள்ளங் கபடமற்ற வெளியூர் வாலிபர்க ளும் தெரிந்தோ தெரியாமலோ அத்தெரு வழியே போய் விட்டால் இவர்களுடைய சரசங்களைக் கண்டு சங்கோச முள்ள வாலிபர்களும் துணிவு கொண்டு அவ்வீடுகளில் புகுந்துவிடுகின்றனர். ஐயோ! பின்னர்ச் சொல்லவும்வேண்

டுமோ! அவ்வாலிபர்கள் அவர்களுக்கிரைதான். இத்தகைய வழக்கம் நமது ஹிந்து சமூகத்திற்கே மகா இழிவைத் தரவல்லது. அத்தகையோருக்கெல்லாம் பிழைப்பதற்கு வேறு துறையைத் தேடிக்கொடுத்து அவர்களைச் சன்மார்க்கத்தில் திருப்பாமல் காருண்ய அரசாங்கத்தாரும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது வருந்தத் தக்கதே. இத்தகைய துஷ்டச் செய்கைகளை நிறுத்த நகர சபையாரும் ராஜீயத் தலைவர்களும் பாடுபடாமல் ஏதோ உபயோகமற்ற விவாதங்களில் தலையிட்டுக்கொண்டிருப்பதும் விசனிக்கத்தக்கதே. புண்ணிய நாடாகிய இப்பரத கண்டத்தில் வியபிசாரிகளே ஒருவருமிலர் என்று ஒரு கிரீஸ் சரித்திராசிரியர் கூறியிருப்பதாக சுவாமி விவேகானந்தர் அடிக்கடி கூறுவதுண்டு. அவ்வாறு ஒழுக்கத்தில் தலை சிறந்து விளங்கிய தேசம் இன்று இருக்கும் நிலைமை என்னென்றுரைப்பது.?

இப்போது சமீபத்தில் சென்னை சட்டசபையின் உபதலைவியாயிருந்த டாக்டர் முத்துலக்ஷிமி ரெட்டியின் முயற்சியால் விபசார விலக்குச் சட்டம் செய்யப்பட்டிருப்பதை அறிய சந்தோஷிக்கிறோம். விரைவில் விபசாரம் நம் நாட்டைவிட்டுத் தொலையவேண்டுமென்பதே நமது பிரார்த்தனை.

அன்று வெங்கட்ரத்னம் அவ்வாறு தன் வீட்டு வாயிலில் மைனர் ஜமீன்தாருக்காகக் காத்துக்கொண்டிருந்தபோதும் பல வாலிபர்கள் அவ்வழியே குடித்துவிட்டும், புகைச் சுருட்டு பிடித்துக்கொண்டும் போய்க்கொண்டிருந்தனர். அவர்கள் ஒரு வீட்டின் வாயிற்படியில் நின்றுகொண்டிருந்த இரு வியபிசாரிகளைப் பார்த்துக் கண்டவா

றெல்லாம் தூஷித்தும், திட்டியும் ஹிம்சை செய்யவே அவர்கள் பயந்துகொண்டு தெருக்கதவைச் சார்த்திக் கொள்ளப்பிரயத்தனப்பட்டபோது அக்குடியர்கள் கதவை உடைத்துத்தள்ளி பலாத்காரமாக உள்ளே நுழைந்து நெடுநேரம் வரை அட்டகாசம் செய்துகொண்டிருந்த னர். இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த வெங்கட் ரத்னம் தனக்குள், "இது ஏது! பெரிய தொல்லையாயிருக் கிறதே; தெரியாமல் நல்ல வாழ்க்கையை எடுத்துக்கொண் டேன். இம்மாதிரியெல்லாம் அவஸ்தைப்பட யாரால்முடி யும்? நானும் கதவைச் சார்த்திக்கொள்ளுகிறேன்" என்று நினைத்துக்கொண்டு உள்ளே செல்வதற்காகத் திரும்பும் போது சுமார் 27, 28 வயதுடைய ஒரு யௌவன வாலி பன் நெல்லூர் சாயவேஷ்டியை அணிந்துகொண்டு கிளாஸ் கோ மல் ஜுப்பாவுடனும், கிராப் தலையுடனும், சிகரெட் பிடித்தவண்ணம் இவள் வீட்டு வாயிற்படியில் ஏறினான். இவளும் அவனுமாக உள்ளே சென்றார்கள். பார்த்தான். வாலிபன்! மற்றைத் தாசிகளின் வீட்டிலிருப்பதுபோல் அங்கொரு ஆயாளையும் காணோம். வீடும் சுத்தமாகவும் மாமிசம் முதலிய துர்நாற்றங்களில்லாமலும் இருந்தது. உடனே அவ்வாலிபன் "நீதானே பத்மாசனி சொன்ன வெங்கடரத்னம் என்பவள்? நான் விஜய நகரம் ஜமீன் தாரின் மைனர். எனக்குப் பெற்றோர்களில்லை. வரும்படி அதிகம். சென்னைக்கு வந்து சுமார் ஏழெட்டு வருஷங்க ளாகின்றன. எனக்குக் காலாடிப் பிள்ளைகள் பலர் சிநேக முண்டு. இன்று முதல் நான் உனக்கு மாதம் நூறு ரூபாய் தருகிறேன். ஆனால் என்னைத் தவிர வேறு ஒரு வனும் இவ்வீட்டில் காலை வைக்கக்கூடாது. என்னால் கூடியமட்டும் உன்னைச் சுகமாகவே வைத்துக்கொள்ளுகி

றேன்" என்று பரிந்து பேசிக்கொண்டே அவளை நெருங்கிப் படுக்கையறைக்கு அழைத்துச்சென்றான். மறுநாட் காலை எழுந்து அவளிடம் ஒரு நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்து, "உன் சேவகன் சுப்பன் மூலமாக வேண்டியவற்றை யெல்லாம் வரவழைத்துக்கொண்டு சுகமாயிரு. இரவு ஏழு மணிக்கு வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனான்.

மறுநாள் பகல் சுமார் பன்னிரண்டு மணிக்குத் திருவல்லிக்கேணி பைகிராப்ட்ஸ் ரோட்டிலுள்ள "கிருஷ்ண விலாஸ்" சாப்பாடு ஓட்டலில் பஞ்சாபகேசன் தன் நண்பன் ராமகிருஷ்ணனிடம், "நண்பா! கலியாணம் முடித்துக்கொண்டு வந்ததும் இந்தப் பாழும் பரீக்ஷைக்குப் படிக்கவேண்டி யிருந்ததனாலும், என் தங்கை புருஷன் சௌந்திரராஜன் என்னுடன் வந்து இவ்விடம் சில நாட்கள் தங்கியிருந்ததனாலும் எனது காதற்கிளியாகிய வெங்கடரத்னம் வீட்டுப் பக்கமே போகமுடியவில்லை. அவள் கதி என்ன ஆயிற்றோ!" என்று விசனத்துடன் கேட்டான். அப்போது ராமகிருஷ்ணன், அவள் வேறு யாரையேனும் சேர்த்துக் கொண்டுவிட்டிருப்பாளென்றும், அவளுக்காக வருந்துவதில் பிரயோஜனமில்லையென்றுங் கூறினான்.

ஆனால் பஞ்சாபகேசன் தன் நண்பன் வார்த்தையைக் கேளாமலும், அவனிடம் சொல்லாமலும் அன்று மாலை நாலரை மணிக்கெல்லாம் தன்னை அழகிய சில்க் உடைகளால் அலங்கரித்துக்கொண்டு தன் விவாகத்தின்போது தன் தாசிக்குச் சன்மானமாக வாங்கி வைத்திருந்த கராச்சி பட்டுப் புடவையையும் சுமார் இருநூறு ரூபாய்களையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டு நேரே வெங்கடரத்னம் வீட்டையடை

ந்தான். அவள் இவனைக்கண்டு திடுக்கிட்டு என்னசெய்வதெனத் தோன்றாமல் திக்பிரமை கொண்டு தனக்குள் "நாம் ஒன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்துவிட்டதே. இனி இவர் வரமாட்டாரென்றல்லவோ நினைத்தேன்! இப்போதென்ன ஆய்விட்டது? இவருக்குக் கலியாணமாய்விட்டபடியால் இனி இவரை நம்புவதில் பயனில்லை. அந்த மைனர் ஜமீன்தாரைத்தான் முதலைப்பிடியாகப் பிடித்துக்கொள்ளவேண்டும்" என்று நினைத்தவளாய் வெளியில் பகிரங்கமாக "வாரும், ஆசைநாயகா! கலியாணம் செய்துகொண்டவுடன் இந்த ஏழையையும் இப்படி மறந்துவிடலாமா?" என்று கூறிக்கொண்டே அவன் கையிலிருந்த சிறு மூட்டையைப் பிடுங்கிக்கொண்டாள். அதில் அழகிய விலையுயர்ந்த பட்டுப் புடவை இருந்ததைக்கண்டு அதைக்கொண்டு போய்த் தன் பெட்டியில் வைத்துப் பூட்டினாள். பின்னர் அவனருகில் உட்கார்ந்துகொண்டு உபசாரமாகப் பேசிக்கொண்டே முன்நாள் நடைபெற்றவைகளையெல்லாம் கூறிவிட்டாள். அதைக்கேட்ட பஞ்சாபகேசன் இடிமுழக்கங் கேட்ட அரவமேபோல் திடுக்கிட்டு, "அப்படியா செய்துவிட்டாய்? அடி பாவி! இப்போது அந்தப் பாவி வருவானே என்ன செய்வது? அவன் வருவதற்குள் போய்விடவும் மனம் வரவில்லையே" என்று கலங்கினான்.

இவ்வாறிவர்கள் பேசிக்கொண்டிருந்தபோதே மைனர் கதவைத் தட்டினான். உடனே வெங்கடரத்னம் பஞ்சாபகேசனிடம் ஒரு அறையில் ஒளித்துக்கொள்ளும்படி கூறிவிட்டுத் தான் போய்க் கதவைத் திறந்தாள். மைனர் ஏன் இவ்வளவு நேரம் கதவைத் திறக்க? என்று மிரட்டிக்கொண்டே உள்ளே சென்றான். இருவரும் அதிக நேரம் உல்லாசமாகச் சம்பாஷித்துக்கொண்டிருந்த பின்னர் பல

விதமான மிட்டாய்களுடன் சாப்பிட்டுவிட்டுச் சயன அறைக்குச் சென்றார்கள். அங்கேயும் சில நிமிஷ நேரம் வெங்கட்ரத்னம் இருந்துவிட்டு அவன் நன்றாகத் தூங்கிவிட்டான் என்றறிந்த பின்னர் மெதுவாக வெளியே வந்து பஞ்சாபகேசன் ஒளிந்திருந்த அறையைத் திறந்து அவனுக்கென்று முன்னமே எடுத்து வைக்கப்பட்ட பலவிதமான பதார்த்தங்களையெல்லாம் அவனுக்குக் கொடுத்த பின்னர் அவனுடனும் சிறிது நேரம் அவ்வறையிலிருந்துவிட்டுப் பிறகு அந்த அறையை மூடிக்கொண்டு ஜமீன்தார் படுத்திருந்த அறைக்குச் சென்று ஒன்றுமறியாதவளேபோல் படுத்துக்கொண்டாள்.

மறுநாட் காலை வழக்கம்போல் மைனர் தன் வீட்டுக்குப் போய்விட்டான். வெங்கட்ரத்னமும் பஞ்சாபகேசனை வெளியிலழைத்து அவனுக்கு வேண்டிய காலை ஆகாரங்களையெல்லாம் கொடுத்து இனி அவனை வரவேண்டாமென்று சொல்லிவிட்டாள். ஆனால் அவன் வெளியிற் போவதற்கு முன்னர் அவர்களிருவரும் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார்கள். இவ்வாறிவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது அவர்கள் அன்று எதிர்பாராவண்ணம் திடீரென்று ஜமீன்தார் அங்குவந்து சேர்ந்தான். இவர்களிருவரையும் பார்த்தான்; பொறுமையும் ஆத்திரமும் அவனுக்கு அடக்க முடியவில்லை. அப்போது அவன் தன் மனத்துள் "இவன் தான் முன்பு இவளை வைத்துக்கொண்டிருந்த பாப்பாரப் பையன் போலும்! சரி; இவனை விட்டுவைத்தால் இவ்வாறே அடிக்கடி நம்மை ஏமாற்றி இங்கு வந்துகொண்டுதானிருப்பான். ஆதலின் இவனை அடுத்துக் கெடுக்கவேண்டும்." என்று நினைத்துக்கொண்டு வெளியில் பகிரங்கமாக

"வெங்கட்ரத்னம்! இவர் தானே முன்பு இங்கு வந்து கொண்டிருந்தவர்? எப்பொழுது வந்தார்?" என்று வினவினான். அப்போது அவர்களிருவரும் பயந்துகொண்ட அச்சத்தினளவை இவ்வளவென்று கூறமுடியாது. மைனர் பஞ்சாபகேசனிடம் அதிகம் பழக்கமுள்ளவனைப் போல் நடந்துகொண்டு அதிக நேரம் அவனுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தான். அன்று மாலை இருவரும் ஒன்றாகச் சேர்ந்து 'பீச்' முதலிய இடங்களுக்குச் சென்று சுற்றித் திரிந்து சுமார் இரவு 7-மணிக்கு இருவருமாகப் பத்மாசனியின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். அந்தப் பொல்லாத வேசை அவர்களிருவரையும் அதிகமான மேதை மரியாதையுடன் வரவேற்றுபசரித்தாள். அவ்வீட்டில் சற்று நேரம் பொழுது போக்கிய பின்னர், "என்ன சார்! தாங்கள் நாளைய தினம் காலை 8-மணிக்கெல்லாம் தங்களுக்குக் கலியாணத்தில் கிடைத்த இரண்டாயிரம் ரூபாயையும் எடுத்துக்கொண்டு வாருங்கள். வெங்கட்ரத்னம், பத்மாஸனி ஆகிய நமதின்பரசக் கிளிகளுக்கு வேண்டிய நகைகளைச் செய்துகொடுப்போம். நாமிருவரும் நாளைப் பகல் முழுவதும் சென்னையிலுள்ள பற்பலவிடங்களுக்குப் போய்வருவோம்" என்று ஜமீன்தார் சொன்னான். இதைக் கேட்ட பத்மாசனியும் பஞ்சாபகேசனைப் புகழ்ந்துபேசி மறுதினம் கட்டாயம் வரும்படி உபதேசித்தாள். வேசையர் பித்துக் கொண்ட காமாதுரனான பஞ்சாபகேசன் வெங்கட்ரத்னம் தன்னை வரவேண்டாமென்று நல்லெண்ணத்துடன் கூறியதையும் யூகித்தறிந்துகொள்ளாமல் அவளிடம் வெறுப்படைந்தவனாகிப் பத்மாசனியின் மீது காமங்கொண்டு மறுநாள் அவ்விடம் வருவதென்னும் தீர்மானத்தின்மீது திருவல்லிக்கேணி "கிருஷ்ண விலாசம்" சாப்பாடு விடுதிக்

குச் சென்று சாப்பிட்டுவிட்டுத் தன் அறைக்குப் போய் அன்றிரவை ஒருவாறு மகா சிரமத்தின் மீது கழித்தான்.

ஜமீன்தார்மட்டும் பத்மாசனியிடமும், அவ்வீட்டின் காவலர்களாகிய காலாடிப்பையல்களிருவரிடமும் இவ்வாறு கூறினன்.—" அந்தப் பாப்பாரப் பையன் இப்படித்தான் வந்துகொண்டிருப்பான். வெங்கட்ரத்தினத்திடம் சொன்னாலும் அவள் அவனிடம் சொல்லிவிடுவாள். நாளையதினம் அவன் தனக்குப் பத்மாசனியிடமிருக்கும் மோகத்தின் மிகுதியால் இரண்டாயிரமுங்கொண்டு ஓடோடியும் வருவான். அவனையும் கொன்றுவிட்டு, அப்பணத்தையும் கொள்ளையடித்துவிடவேண்டும். ஆனல் மகா ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவன் தஞ்சாவூர் சப் ஜட்ஜியின் புதல்வனாதலால் புலம் விசாரித்து நம்மைத் தண்டிப்பார்கள்." என்று சொல்லிவிட்டுத் தான் வெங்கட்ரத்னம் வீட்டிற்குச் சென்று அவளிடம் அவனை ஏன் சேர்த்தாய் என்று கேட்டு அவளைத் திட்டியடித்துத் துன்புறுத்தினன்.

ஐயோ பாவம்! மறுநாட்காலை 8-மணிக்கெல்லாம் பஞ்சாபகேசன் ரூபா இரண்டாயிரத்தையும் எடுத்துக்கொண்டு தன்னை அலங்கரித்துக்கொண்டு காலேஜுக்கும் போகாமல் அவசரமாகப் புறப்பட்டு நேரே பத்மாசனியின் வீட்டுக்குச் சென்றான். இவனுக்காக அங்கு காத்துக்கொண்டிருந்த ஜமீன்தார் இவனை உல்லாசமாக வரவேற்று அதிகநேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்துவிட்டுப் பின்னர் இருவருமாக வெளியே சென்றார்கள். வழியில் ஜமீன்தார் பஞ்சாபகேசனை முன்பின் பாராத இடங்களுக்கெல்லாம் அழைத்துச் சென்று மிகவும் அலுத்துப்போனதால் சைனபஜாரிலுள்ள

ஒரு கடையில் புகுந்து, பஞ்சமகாபாதகங்களுள் எதைச் செய்யத் துணியவேண்டுமோயினும் முதன் முதலில் கள் என்னும் குடியைத்தான் நெருங்கவேண்டுமாதலின் ஜார்ஜ விஸ்கியை அளவு மீறி குடித்துவிட்டுக் கையிலும் இரண்டு பாட்டில்கள் எடுத்துக்கொண்டு இருவருமாகப் பத்மாசனி யின் வீடுவந்துசேர்ந்தார்கள்.

அவ்விலைமாது முன் சங்கேதப்படியே பஞ்சாபகேசனை அதிக ஆவலுடன் வரவேற்றுபசரித்துத் தன் படுக்கை யறையுள் அழைத்துச்சென்று மகா குதூகலமாகச் சம்பா ஷித்தாள். இம்மோகத்தில் அதிகம் மயங்கினான் பஞ்சாபகே சன்; அவள் தன்னுலியன்ற சாமர்த்தியங்களாலெல்லாம் அவனை இன்னும் அதிகமாக மயக்கினாள். இறுதியில் மயக் கந் தலைக்கேறும்படியான ஒருவித கலப்புக்கலந்த பாலைக் கொண்டுவந்து கொடுத்தாள். அவன் தன் மயக்கத்தில் அந்தப்பாலின் குணாகுணத்தையறியாமல் பத்மாசனியின் கரத்தால் கொடுக்கப்பட்டதை அமிர்தமென்றே கருதி உட்கொண்டுவிட்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் தலை கிறுகிறென்று சுழன்று அருகிலிருந்த படுக்கையின் மீது வீழ்ந்தான். உடனே ஜமீன்தார் தான் கொண்டுவந்த விஸ்கி பாட்டிலைத் திறந்து பத்மாசனிக்கும் இரு காலாடி களுக்கும் வேண்டியமட்டும் குடிக்கக் கொடுத்துத் தானும் குடித்தான். அப்போது பத்மாசனி பஞ்சாபகேசனுடைய மணி பர்ஸிலிருந்த எல்லா நோட்டுகளையும் எடுத்துக்கொ ண்டுவந்து மற்றொரு அறையிலுள்ள தன் பீரோவில் வைத் துப் பூட்டினாள். பஞ்சாபகேசன் அளவு கடந்த மயக்கத் தில் கிடக்கிறானென்பதை அறிந்து ஜமீன்தாரும் பத்மா சனியும் ஒன்றுமறியாதவர்களேபோல் வெங்கட்ரத்னத்தின்

வீட்டுக்குப்போய் ஏதேதோ ஊர்வம்பு பேச ஆரம்பித்தார்கள். காலாடிகளான கணபதியும் பட்டு என்பவனும் அதிகமாகக் குடித்துவிட்டிருந்தபடியாலும், முன்னரே ஜமீன்தார் கட்டளையிட்டிருந்ததாலும் பஞ்சாபகேசனை மெதுவாகக் கட்டிலினின்றுங் கீழே இறக்கி பாய்மீது படுக்க வைத்து அவனுடைய கழுத்து, கை கால் முதலியவைகளை வெவ்வேறாகத் துண்டித்துவிட்டுத் தோட்டத்திலுள்ள பாதி மூடிப்போன ஒரு பாழுங் கிணற்றில் போட்டுவிட்டு அதையும் தூர்த்துவிட்டார்கள்.

ஐயோ! பாவம் மனைவியை வஞ்சித்து வேசிகளை நாடிய பஞ்சாபகேசனுடைய கதியைப்பாருங்கள்! வெங்கட்ரத்னம் இவற்றையெல்லாம் ஒருவாறு அறிந்துகொண்டும், இரு காலாடிகளுக்குக் குடிப்பதற்கு ஏதோ கொடுத்து அவர்களால் விஷயத்தை ஒருவாறு யூகித்துக்கொண்டும், தன் நிலைமைக்காக மனம் கலங்கியவளாய் இறைவனிடம் விரைவில் தனக்கு வேறு துறையைக் காண்பிக்கும்படி பிரார்த்தித்துக்கொண்டாள்.

நான்காம் அத்தியாயம்.

உண்மை வெளியாயிற்று.

இவ்வாறு இரண்டு மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் திருவண்ணாமலையிலிருந்து பெண் ருதுவாகி ஐந்தாறு மாதங்களாகின்றபடியால் உடனே முகூர்த்தம் வைத்துக் கொள்ளும்படி மிஸ்டர் நாராயணசாமிக்கு லெடர் வந்ததால் அவரும் பஞ்சாபகேசனுக்கு இவ்விஷயமாய் லெடர் எழுதினார். அதற்குப் பதிலே வரவில்லை. மிஸ்டர் நாரா

யணசாமிக்குச் சந்தேகம் அதிகமாய்விட்டது. "இதென்ன அநியாயம்! இப்படியும் ஒருவனிருப்பானா? முகூர்த்தம் என்று கடிதம் எழுதியும் பதிலைக்காணோமே! அவனுடைய நண்பன் ராமகிருஷ்ணனுக்காவது கடிதம் எழுதுவோம்" என்று தன் மனத்துள் நினைத்துக்கொண்டு அவ்வாறே கடிதமும் எழுதினார்.

மிஸ்டர் நாராயணசாமியின் கடிதத்தைப் பெற்ற ராமகிருஷ்ணன், மூன்று, நான்கு மாதங்களாகப் பஞ்சாபகேசன் சென்னையிலிருப்பதாகத் தனக்குத் தெரியவில்லையென்றும், தானும் எவ்வளவோ பிரயத்தனப்பட்டுத் தேடிப்பார்த்ததாகவும் பதில் எழுதிவிட்டான். மிஸ்டர் நாராயணசாமியும் அவர் குடும்பத்தாரும் இதைக்கேட்டு, விசன சாகரத்தி, லாழ்ந்து இந்தச் செய்தியை திருவண்ணாமலைக்கும் அறிவித்துவிட்டார்கள். மிஸ்டர் நாராயணசாமியும் அருணாசல சாஸ்திரியாரும் சென்னைக்குப் போய் விசாரித்துப் பார்த்தும் பயனின்றித் திரும்பிவிட்டனர். இறுதியில் அவன் வெளிநாடுகளுக்குப் போய்விட்டிருப்பானென நினைத்தார்கள். ஜானகியோ தன் விதியை நொந்துகொண்டு பல வாறு சிந்தித்தவண்ணமிருந்தாள்.

இச்செய்தியையறிந்த ஜானகியின் மாமன் மகனான சீனிவாசன் வேலூரிலிருந்து புறப்பட்டு சென்னை சேர்ந்து ராமகிருஷ்ணன் மூலம் பஞ்சாபகேசனுடைய நடவடிக்கைகளையெல்லாம் அறிந்துகொண்டு சென்னையில் விலைமகளிர் அதிகமாக வசிக்கும் அனாசாரமான தெருக்களிலேயே இதனுண்மையைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று தீர்மானித்து தான் சென்னைக்கு வந்த மறுநாளே யானைகவுனித் தெரு வழியே சென்று அங்கு ஏதேனும் புலம் கிடைக்குமோ

வென்று அலைந்து திரிந்துகொண்டு அதற்கடுத்தாற்போ லுள்ள இரண்டு மூன்று தெருக்களிலும் விசாரித்து இறுதி யில் செங்காங்கடைத் தியேட்டருக்கருகில் வந்து நின்று சற்று யோசித்தவண்ணமாய் அருகிலிருந்த ஒரு திண்ணை யின்மீது உட்கார்ந்தான். அப்போது மாலை 6-மணியிருக் கும். அச்சமயம் யாரோ இருவர் நன்றாகக் குடித்துவிட்டு உளறிக்கொண்டே போனார்கள். அவர்களுடைய அந்த உளறலில் "பாவம்......தஞ்சாவூர் ஜட்ஜ்......ராயப்பேட் டை......பத்மாசனி......நம் குழந்தை......" என்பதுமட் டும் சீனிவாசனுடைய காதில் நுழைந்தது. ஏதேதோ நினைத்துக்கொண்டிருந்தவன் திடீரென்று விழித்தெழுந்த வன் போல் எழுந்து அவர்கள் பின்னாலேயே சென்றான். அவ்வாறு சற்று தூரம் சென்றதும், அவர்களுடன் ஏதே தோ பேசத்தொடங்கி இன்னும் அதிகமான குடியை அவர்களுக்கு ஊற்றினால் அவர்களிடமிருந்து இன்னும் அதிகமான இரகசியத்தைக் கிரகிக்கலாமென்று யோசித்து மற்றோர்கடையில் குடிக்கும்படி அவர்களுக்குப் பணத் தைக் கொடுத்தான். அப்போது அவர்கள் யானைகவுனித் தெருவின் கடைசியிலுள்ள சாராயக் கடையில் புகுந்தனர். சீனிவாசன் வெளியில் நின்றுகொண்டு "ஆ! என்ன அநி யாயம் நாகரிகம் மிக்க காலமெனச் சொல்லப்படும் இந்நா ளிலும், ஜனங்களின் க்ஷேமத்தைக் கோரி அரசு புரிவதாய் சொல்லிக்கொள்ளும் இந்த அரசாங்கத்தார் எத்துணை மதுபானக் கடைகளை வைத்து ஆதரிக்கின்றனர். ஜனங்கள் பாடுபட்டுத் தேடிய பணத்தை வீணாக்கித் தங்கள் தேகத் தையும் வீணே அழித்துக்கொள்ளுகிறார்கள். அரசாங் கத்தாரும் சமூகத் தலைவர்களும் தனித்தனியே பாடுபட்

டாலன்றி இவைகள் எவ்வாறு ஒழியப்போகின்றன ?" என்று நினைத்துக்கொண்டிருந்தான்.

அப்போது கடையினின்றும் வெளிப்போந்த முரடர்களிருவரும் அதிகமாகக் குடித்துவிட்டு ஸ்மரணையற்றவர்களாய் அவர்களுக்குப் பணங் கொடுத்துதவிய சீனிவாசனை அதிகமாகப் புகழ்ந்து பேசினார்கள். இதுதான் சமயமெனக் கண்ட சீனிவாசன் அவர்களைத் தட்டிக் கொடுத்து "சற்று நேரத்திற்கு முன் நீங்கள் ஏதோ தஞ்சாவூர் ஜட்ஜ ......ராயப்பேட்டை......பாவம்......என்று பேசினீர்களே அதன் விஷயமென்ன ?" என்று வினவினான். அதற்கவர்கள், "யாரோ தஞ்சாவூர் ஜட்ஜியின் பையனாம்; ராயப்பேட்டையில் படித்துக்கொண்டிருந்தானாம். அவன் ராமகிருஷ்ணன் தெருவிலுள்ள வெங்கடரத்னத்தை வைத்துக் கொண்டிருந்தான்," என்றுமட்டும் சொல்லிவிட்டு மற்றதைச் சொல்லவேயில்லை. எவ்வளவு வற்புறுத்தியும் அவர்கள் ஒன்றுஞ் சொல்லாததால் சீனிவாசன் வெங்கடரத்னம் என்பவளின் வீட்டைத் தேடிச் சென்று தன் சாமர்த்தியத்தினால் அவளுக்கு மிக்க நம்பிக்கைக்குரியவனாக இருந்து விஷயங்களை விசாரித்தான்.

உடனே தஞ்சாவூருக்கும் திருவண்ணாமலைக்கும் தந்தியடித்து சப் ஜட்ஜையும், வக்கீலையும் வரவழைத்து வெங்கடரத்னத்தின் உதவியால் பத்மாசனி, ஜமீன்தார், முரடர்களிருவர் ஆகிய நால்வரையும் கைது செய்து கோர்ட்டில் விசாரணை நடக்கும்படி சீனிவாசன் ஏர்பாடு செய்தான். பலநாட்களின் விசாரணைக்குப் பின்னர் அந்நால்வரும் குற்றவாளிகளெனத் தீர்மானிக்கப்பட்டு, முரடர்கள் இருவரும் மரண தண்டனையையும், தாசியும், மைனரும் தீவாந்தர சிக்ஷையையும் அடைந்தார்கள்.

பஞ்சாபகேசன் கடல் கடந்து அந்நிய நாடுகளுக்குச் சென்றிருப்பானென எண்ணிய அவனது பெற்றோர்களும் மாமனார் முதலிய உறவினர்களும் அவன் கொலை செய்யப் பட்டானென அறிந்து ஆற்றொணுத் துக்கத்தையடைந் தார்கள். அருணுசல சாஸ்திரியார் தம் ஓரே குமாரி பால்ய விதவையாயினளே என்று ஓலமிட்டழுதார். ஜானகியும் தன் தலை விதி இப்படியா முடிந்ததென்று விசனசாகரத் துள் மூழ்கினுள். சில வைதிகப் பிராமணர்கள் ஜானகியின் தலைமயிரைக் களைந்து வைதவ்ய கோலத்தை அணியும்படி செய்யவேண்டுமென்று வற்புறுத்தினுர்கள். ஆனுல் ஜான கிக்கு அப்போது வயது பதினுறும் பூர்த்தியாகாததால் அருணுசல சாஸ்திரியார் அவ்வாறு செய்ய மறுத்து அவ ளைக் கைம்பெண்ணுக வீட்டில் வைத்து வளர்த்து வந்தார். அப்போது நாட்டில் விதவா விவாகப் பேச்சு அதிகமா யிருந்தபோதிலும் வக்கீல் சாஸ்திரியார் சற்று வைதிகப் பித்து உடையவராதலால் அவ்வாறு செய்ய மறுத்துவிட் டார்.

ஐந்தாம் அத்தியாயம்.

வியபிசார ரகசியம்.

ஸ்ரீனிவாசனிடம் உண்மையைச் சொல்லிவிட்ட வெங் கடரத்னம் பின்னரும் அந்தத் தெருவில் வசிக்க மனமற்ற வளாய்த் தனக்கு வேறு நல்ல துறை ஏதேனும் காட்டும் படி வேண்டிக்கொண்டாள். அப்போது அவள் தன் சரித் திரத்தைப் பற்றியும், அந்தத் தெருவின் அனுபவத்தைப் பற்றியும் பின்வருமாறு கூறினுள் :—“உலகத்திலுள்ள எல்

லாச் சிறந்த மதங்களின் சீரிய கொள்கைகளையுந் தன்னுள் அடக்கிக்கொண்டு கால தேச வர்த்தமானங்களுக்கேற்ற வாறு சீர் திருத்தங்களுக்கு இடங்கொடுக்கக் கூடியதான நமது சனாதன தர்ம ஹிந்து மதம் தற்சமயம் சமூக ஒற்று மை யின்மையாலும், சமூக சேவை யின்மையாலும் அடைந்திருக்கும் கேவலமான நிலைமையை என்னென்றுரைப்பது நான் இங்குப் போந்த பின்னர் என்னுடைய தோழிகளாகிய வியபிசாரிகளின் குண விசேஷங்களையும், அவர்களால் பாலியர்கள் அடையும் அவஸ்தைகளையும் நான் கண்டவற்றைச் சிறிது விளக்குகிறேன்—தேசத்தொண்டு செய்யவும் மதத் தொண்டு செய்யவும், பரிசுத்தமான பிரம்மசாரிகள் அடியார்களாக இருப்பதேபோல், பெண்களுக்கும் சர்வ சுதந்தரங்களும் உண்டு என்பதற்கேற்ப அவர்களும் விவாக மின்றியே தேவத்தொண்டு செய்துகொண்டு தேவ அடியாராக இருக்கப் பிரியமும், மனோ திடமுமுள்ளவர்கள் அவ்வாறு இருக்கலாமென்று நமது மதத்தில் இடந்தந்து சில ஸ்திரீ அடியார்களை உற்பத்தி செய்து வந்ததில் சில தலைமுறைகளுக்கப்பால் பெண் தெய்வங்களாகிய அவர்கள் கோயில்களிலுள்ள ஆண்களால் கெடுக்கப்பட்டு இற்றை நாளில் வியபிசாரிகளெனத் திரிகின்றனர். பரத கண்டத்தின் சிறப்பான கலைகளுள் சிறந்த சங்கீதமும், பரத நாட்டியமும் பிறந்து வளர்ந்த இல்லங்களாகிய தேவ அடியார்களின் இல்லங்கள் இதுகாலை வியபிசாரிகளின் வீடுகளாக மாறிக் கிடக்கின்றன. அவர்களையணுகி எத்துணையோ பற்பல ஜாதிப் பெண்களும் பற்பல காரணங்களால் வியபிசாரத் தொழிலை மேற்கொண்டுவிட்டார்கள். இன்று எல்லா மதத்தாருள்ளும் வியபிசாரிகள் பெருகிக் கிடக்கின்றனர். சமூக சீர் திருத்தக்காரர்களும், திண்ணை வேதாந்தி

களும், காருண்ய அரசாங்கத்தாரும் இதை நிவர்த்திப்ப தில் எத்தகைய சிரத்தையும் எடுத்துகொண்டதாகத் தெரியவில்லை. இந்நிலைமையில் பிற மத அறிஞர்களும் ஹிந்து மதம் ஒழுக்கங் கெட்ட தேவதாசி வழக்கத்தை ஆதரிக்கின்றதென்று அறியாமற் கூறிவிடுகின்றனர். அன்றியும் அன்னாரின் சமூகத்திலுள்ள வியபிசாரிகளும் ஹிந்துமதத்தின் தாசிகளைக் கண்டு அவர்களுடைய சகவாச தோஷத்தால் வெளிவந்துவிடுவதாகவும் குற்றம் சுமத்துகின்றனர். அத்தகைய பிற மத அறிஞர்கள் இப்பரதகண்டத்திலும், முன்னொரு காலத்தில் கிரேக்கர் போன்ற பிற நாட்டார் ஆச்சரியப்படும் வண்ணம் ஒரு வியபிசாரியேனும் இருந்ததில்லையென்பதையும், பிற்காலத்தில் மத சேவை செய்வோர் குறைந்துவிட்டதால் எல்லா மதங்களிலும் சிற்சில அனாசாரப் பழக்கங்கள் நுழைந்துகொண்டதே போல் ஹிந்து மதத்திலும் வியபிசாரிகள் பெருகிவிட்டனரென்பதையும் ஏன் அறியலாகாது? பிறமத சமூக சீர்திருத்தக்காரர்களும், மதப் பிரசாரகர்களும் தங்கள் தங்கள் சமூகத்தில் நுழைந்துகொண்ட இத்தகைய வழக்கத்தையும் தடுக்க முயலாது வேறென்ன செய்கின்றனரோ?

"என்ன பாருங்கள்! இந்தத் தெருவில் இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் நான் வந்தபோது 10, 12 வியபிசாரிகள் தானிருந்தனர். இப்போது 20, 25 வீடுகள் ஒவ்வொரு வீட்டிலும் மூவர் நால்வராக அதிகரித்துவிட்டனர். இப்படிப் பெருவாரியாக அதிகரித்துவிட்ட பரத்தையர்களுக்கும் ஜீவனம் கிடைத்துக் கொண்டுதானே இருக்கிறது! சரியாகச் சாப்பாட்டிற்கு இல்லாத பிள்ளைகளும் மாலையில்மட்டும் எங்கேயாவது போய் இரண்டு

மூன்று திருடிக்கொண்டு வந்தேனும் இத்தெருவில் அழுது விட்டுப் போகிறார்கள். இவ்விலைமாதர்கள் ஜாதி, மதம், முதலிய எவ்வித வித்தியாசங்களையும் பாராமல் உயர்ந்தவர், தாழ்ந்தவர், தகப்பன், பிள்ளை, எஜமான், சேவகன் ஆகிய யார் வந்தபோதிலும் அவரவரிடமும் தங்களின் உண்மைக் காதலரென்று சொல்லிப் பணம் பறிப்பதிலேயே கண்ணாயிருப்பார்கள். இவ்வீடுகளில் பல கொள்ளைகளும், களவுகளும் நடக்கின்றனவென்பதற்கு நமது தஞ்சைசப் ஜட்ஜ் அவர்களின் குமாரரது உதாரணமே சாலுமன்றோ? ஒவ்வொரு வாலிபரும் ஏன் பிரமசரியத்தை ஒழுங்காக அனுஷ்டித்துப் பின்னர் கிரகஸ்தர்களாகத் தம் மனைவியுடன் வாழலாகாது? அப்போது இத்தகைய வேசையர்களும் ஜீவனோபாயமின்றி வேறு துறைகளில் தங்கள் புத்தியைச் செலுத்தமாட்டார்களா? மகாத்மா காந்தியடிகளும், மற்றும் சிலரும் நம் தமிழ் நாடு தவிர மற்றை மாகாணங்களில் இவ்வகையினரையும் சீர்திருத்தி வருகிறார்களாமே? இத்தகைய வேசைகளைப் பற்றியே, "இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந் திருநீக்கப்பட்டார் தொடர்பு" என்று நாயனாரும் கூறிப் போந்தார். மேலும் வியபிசாரம் செய்வோருக்குக் கிரந்தி, அரையாப்பு முதலிய பல கொடிய வியாதிகள் சம்பவிக்கின்றன. மிக அழகான, மேன்மையான இளம் வாலிபர்கள் இத்தெருவுக்கு வந்து மறுநாளே இவ்விடம் திரும்பாமல் நோயினால் எமனுலகஞ் சென்றுவிடுகின்றனர். இன்னமும் ஒரு முக்கிய ஆச்சரியம் யாதெனில், இவ்வீதியில் ஒரு சிலர் பணத்தின் ஆசையால் தாம் மாதவிடாய்க்காலத்தும் அதைப் பிறருக்குத் தெரிவிக்காமலே பேராவலுடன் ஓடிவரும் ஆண்மக்களுடன் சேருவதால் அந்தோ! அந்த

ஆண்மக்களின் கதிதான் என்ன ? இத்தகைய விலைமாத ரைப் பேய் என்று சொல்லினும் தகும். இதையெல்லாம் நினைக்கும்போதே என் தேகம் நடுங்குகிறது. ஏன் இந்தப் பாழும் தெருவில் குடி புகுந்தேன் என்று விசனமாய் இருக்கிறது.

"நான் என்ன செய்வேன் ? என்னுடைய பதினன் காவது வயதிலேயே என் புருஷன் இறந்தார். என் பெயர் வனஜாக்ஷி. ஊர் மதுரை. அவர் இறந்த பின்னர் 2, 3 வருஷங்கள் பொறுத்துப் பார்த்தேன். தக்க வயதில் இயற்கையாய் எழும் இல்லற இன்ப இச்சை என்னைத் தடுமாறச் செய்துவிட்டது. விதவா விவாகமேனும் செய்துவிடும்படி என் பெற்றோர்களைக் கேட்டுக்கொண்டேன். அவர்கள் என் கஷ்டத்தைக் கவனிக்கவேயில்லை. பெரிய பெரிய மகான்களெல்லாம் இத்தகைய இச்சையால் தடுமாறிவிடுகின்றனரெனின் என் கதி எம்மாத்திரம் ? சிலபெண்கள் கணவன் இறந்தபிறகும் ஓரேபிடிவாதமாய் புருஷசேர்க்கை இல்லாமலே இருக்கப் பிரியப்படலாம். அப்படிப்பட்டவர்களை நான் போற்றுகிறேன். ஆயினும் அவர்கள்தொகை மிகக் குறைவு. இவ்வாறு நான் அலைந்துகொண்டிருக்கும் போது பக்கத்து வீட்டுப் பத்மாசனி அங்கே தன் தங்கை வீட்டுக்கு வந்தாள். அவள் என்னை இங்கேஅழைத்துவந்துவிட்டாள் என் அதிருஷ்டமும் நன்றாயிருந்து நான் வந்த மறுநாளே நமது பஞ்சாபகேசனும் இங்கு வந்தார். ஏதோ ஒரே ஜாதியாய்விட்டதே என்று ஆறுதலடைந்தேன். அவருக்குப் பின்னர் மைனர் ஜமீன்தார் வந்தபோதுதான் என்மனம் அதிகம் வெறுத்துவிட்டது. அதிலும் அவர்கள் பஞ்சாபகேசனைக் கொலை செய்துவிட்டார்களென்பதை

அறிந்ததும் இவ்வாழ்க்கையை முற்றிலும் வெறுத்தேன். தாங்கள் தயவுசெய்து எனக்கு வேறு எத்துறையையேனும் காண்பிப்பதுடன் என்னை இத்தெருவை விட்டு அப்புறப்படுத்திவிடுங்கள்" என்றிவ்வாறு கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்.

இதைச் செவி மடுத்த சீனிவாசன் பால்ய விதவைகளின் கஷ்டத்திற்காக இரங்கி, வெங்கட்ரத்னத்திற்கு ஏதேனும் நல்ல ஏற்பாடு செய்யவேண்டுமென்று தீர்மானித்து ஸ்ரீமதி யாமினி பூரண திலகம்மாள் அவர்களால் சென்னையில் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் ஹிந்து யுவதி சரணாலயத்தில் அவளைச் சேர்த்துவிடக் கருதி தகுந்த சிபார்ஸின் மீது அவ்வாறே அவளை அங்குச் சேர்த்துவிட்டான். வெங்கட்ரத்னமும் தன் பழைய பெயர் பங்கஜம் என்னும் நாமத்துடன் அச்சரணாலயத்தில் கைத்தொழிலைக் கற்றுக்கொண்டும், சன்மார்க்கத்தில் புத்தியைச் செலுத்தக் கூடிய அறிவு நூல்களை வாசித்துக்கொண்டும் காலங் கழித்தாள்

ஆறும் அத்தியாயம்.

விதவா விவாகத்தின் அவசியம்.

இவ்வாறு சில நாட்கள் கழிந்த பின்னர் ஒரு நாள் மாலை திருவண்ணாமலையின் கோயில் சந்நிதானத்தில் பெரிய கூட்டங் கூடியிருந்தது. சுமார் ஐயாயிரம் ஜனங்கள் அங்கு நடந்துகொண்டிருந்த பிரமாதமான பிரசங்கத்தைக்கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஸ்திரீகளுக்கென பிரத்தியேகமான இடம் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. அங்கு ஜானகியும்

அவள் தாயாரும் மற்றும் பல பெண்மணிகளும் உட்கார்ந்திருந்தார்கள். அப்போது அங்கு, லாஹூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் விதவா விவாக சபையினின்றும் பிரசாரத்தின் பொருட்டு வந்திருந்த நரேந்திரநாதசேனர் என்பவர் பின் வருமாறு ஒரு நீண்ட பிரசங்கம் செய்துகொண்டிருந்தார்:—

நமது தேசத்தில் புராதனகாலத்தில் காதல் மணமும் புரௌடாவிவாகமும் நடந்துவந்தன. ஆண்பெண் இருபாலாரும் பிரமசரியத்தை ஒழுங்காக அனுஷ்டித்தனர். ஆண் மகன் தனக்கு 21 வயதாகும்வரையும் பெண் தனக்கு 16வயதாகும் வரையும் கண்டிப்பான பிரமசரியத்தை அனுஷ்டித்துத் தேகவலிமையை உரமாக்கிக்கொண்ட பின்னரே ஒருவரை யொருவர் நேரில் அறிந்து மணந்துகொள்ள விரும்பிய பின்னர் விவாகம் நிறைவேறியது. எனவே காதலனும் காதலியும் எவ்விதமான பிணக்குமின்றி இல்லறத்தைச் செவ்வனே நடத்தியதுடன் நீண்ட ஆயுளுடன் திடகாத்திரர்களாய் வாழ்ந்து தங்களைப் போன்ற வலிவுள்ள மக்களைப் பெற்று நமது சமூகத்துக்கும் தேசத்துக்கும் தொண்டு புரிந்துவந்தனர். ஆனால் இற்றைநாளில் பால்மணமாறாச் சிறுவயதிலேயே பெற்றோர்கள் பதுமைகளுக்கு விவாகம் முடிப்பதேபோல் முடித்துவிடுகின்றனர். வாலிபர்கள் தேகத்தை உரமாக வளர்வதற்கு இடந்தராமல் பல ஹீனப்பட்டு அற்ப ஆயுளில் மாண்டுவிடுகின்றனர். பெண்கள் மரித்தால் ஆண்கள் மட்டும் விவாகம் புரிந்து கொள்ளுகின்றனர். ஆனால் சிறுபெண்களைப் பால்ய விதவைகளாக்கி அப்பெண்களுக்கு இவ்விகலோகத்திலேயே நரகத்தை அளித்துவிடுகின்றனர் நம் சமூகத்தார். அந்தோபரிதாபம்! ஒரு பெண் தான் பருவத்தையடையுமுன் தன் புருஷனை, அன்று பத்துப்பேர் பார்க்கத்தன் கழுத்தில் ஒரு தாலியைக்

கட்டிய ஒருவனை இழந்துவிடுவதால் பால்ய விதவையாகி அவள் அனுபவிக்கும் இந்நரக வேதனையை அனேக பெண்டிரை மணந்து கொண்டும் அதுவும் போதாதென்று விலை மகளிர் வீடுகளுக்கும் சென்று திரும்பும் ஆடவர் எவ்வாறு அறியப்போகிறார்கள். ஆடவர்களும் பெண் ஜன்மமெடுத்து பால்யவிதவைகளானாலன்றி அத்துக்கம் இவர்களுக்கு விளங்கவே விளங்காது. பால்ய விதவைகள் தங்கள் யுக்த வயதையடைந்ததும் இயற்கையாக மனித சுபாவத்தில் காணப்படும் ஒருவகை ஆண் பெண்சேர்க்கை விருப்பத்தால் தூண்டப்படுகிறார்கள். அத்தகைய இயற்கை விருப்பத்தை அடக்கமுயல்வது விபரீதமாகத்தான் முடியும் ஆயிரத்திலொருவர் அடக்கியும் வாழ்நாள் முழுதும் பிரமசரியத்துடன் இருக்கலாம். ஆனால் ஜனத்தொகையுள் முக்கால் பங்கினருக்குமேல் அவ்வாறு இருத்தல் அசாத்தியம். எல்லாம் வல்ல ஏகபராபரன் சன்னிதானத்தில் ஆண் பெண் ஆகிய இருபாலரும் சமமாகவே பாவிக்கப்படும்போது இவ்வுலகில்மட்டும் ஆடவர்கள் பெண் தெய்வங்களைக் கண்ணியக் குறைவுடன் நடத்துவதற்குக் காரணமென்ன? ஒரு பெண் ஒழுக்கந்தவறினால் அதற்கு ஆண்மகனே ஜவாப்தாரியாவான். நல்ல யௌவன பருவத்தில் இத்தகைய அவாவினால் தூண்டப்படுகிற பெண்கள் வீட்டை விட்டு வியபிசாரிகளாக வெளியேறி விடுகின்றனர். சிலர் வீட்டிலேயே இரகசியமாகத்தம் பந்து மித்திரர்களுடன் கூடிக் குலாவி விடுகிறார்கள். பின்னர் கர்ப்பவதிகளாய்விடும்போது ஊராருக்கும் சமூகத்துக்கும் அஞ்சி சிசுஹத்தி முதலான பாபங்களுக்கும் ஆளாகிவிடுகின்றனர். உலகத்திலுள்ள மற்றெல்லா தேசங்களைக் காட்டிலும் நமது தேசத்தில்தான் அதிகமான

சிசுக்களும் வாலிப வயதுள்ள மங்கைகளும் பிரதிவருஷமும் எமனுலகம் நாடிச் செல்கின்றனர். அந்தோ! இதற்குக் காரணம் நமது சமூகமே!

இவைகளையெல்லாம் கவனித்துத்தான் வியபிசாரத் தனமும் இரகசிய சோரத்தனமும், சிசுஹத்தி முதலான கொடிய செய்கைகளும் நடவாமலிருக்கும் பொருட்டே இஸ்லாத்தில் விதவாவிவாகம் அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது ஏன்? மனுதர்ம சாஸ்திரத்திலும் ஸ்திரீ புருஷருக்கு பேருக்கு மாத்திரம் கலியாணமாய் தேக சம்பந்தம் ஆகாமலிருக்கும் பக்ஷத்தில் புனர் விவாகம் செய்துகொள்ளலாம். (9: 179) என்று விதியிருக்கிறது. நமது ஹிந்து பால்ய விதவைகளில் பலர் சமீபத்தில் முஸ்லிம்களுடன் முதன் முதலில் தேக சம்பந்தத்துக்கு ஆசைப்பட்டுப் போய்ப் பின்னர் அப்பெண்மணிகள் முஸ்லிம்களாகவே மாறிவிடுகின்றனர். ஆதலின் நமது தற்கால ஆசாரங்களைச் சீர்திருத்தம் செய்துகொள்ளல் வேண்டும். இவ்வாறு சொல்லும்போது நம் மதத்தின் வைதிகர்கள் மதம் கெட்டுவிடுகிறதென்று முறையிடுகின்றனர். ஆனால் மதத்திற்கும், ஆசாரத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. மதம் எப்பொழுதும் ஒரே நிலையாய்த்தன் மூலக்கொள்கைகளுடன் நிற்பது. ஆனால் ஆசார அனுஷ்டான முறைகள் காலதேச வர்த்தமானங்களுக்கேற்றவாறு மாறுபட்டுவரும். இப்பிரபஞ்சமும் அதிலுள்ள ஜனங்களும் தினே தினே விருத்தியடைந்து வருகிறார்கள். எனவே ஆசாரங்களையும் அடிக்கடி திருத்தவேண்டும். ஆசாரத் திருத்தத்தினால் மதத்திற்கு எத்தகைய ஊறும் நேரிடாது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்த ஆசாரங்களை இன்றும் அவை அநாவ

சியமானபோதும் அநுஷ்டிக்கப் பிரயத்னப்படுவது அறியாமையேயாகும்.

இத்தகைய விஷயங்களையெல்லாம் தீர யோசித்தும் ஆயிரக்கணக்கான நம் நாட்டு பால்ய விதவைகளின் அழுகைத் தொனியானது தம் ஹிருதயத்தில் தாக்கியதை உணர்ந்தும் பஞ்சாபின் தலைநகரான லாஹூரில் 1914ஹு டிசம்பர் மீ 1உயன்று ஸர் கங்காராம் என்னும் மகான் விதவா விவாக சபையொன்றை நிறுவினார். முதன் முதலில் வைதிகர்களின் கட்சிக்கு விரோதமாகச் செல்வது பிரம்மாண்டமாகத் திரண்டு வரும் வெள்ளத்தில் எதிர்நோக்கி நீந்திச்செல்வதுபோல் அசாத்தியமாகக் காணப்பட்டபோதிலும் நாளடைவில் இச் சமூக சீர்திருத்தமானது அறிஞர்களனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு 1925-ம் ஆண்டில் அச்சபையின் ஆதரவில் நமது நாட்டில் 2663 விதவா விவாகங்கள் நடைபெற்றன. 1922-ம் ஆண்டில் எடுக்கப்பட்ட சென்ஸஸ் கணக்குப்படி நமது நாட்டில் 97800 விதவைகள் பத்து வயதுக்குட்பட்டவர்களாயிருந்தார்களென்றால் இவர்களின் துக்கத்தைப்பற்றி என்னென்றுரைப்பது? இவர்களால் நமது சமூகம் எத்துணைக்கேவலமான நிலைமையை அடைந்துவிட்டதென்பதைச் சிறிதுநேரமேனும் சிந்திக்கும் எந்த இந்தியனும் கண்ணீர் சொரியாமலிரான்.

ஆதலின் பால்ய விதவைகள் தாராளமாகத் தங்கள் பெற்றோர்களிடம் தங்களுக்குப் புனர்விவாகம் செய்யும்படி வற்புறுத்திப் போராடவேண்டும். இவ்வாறு ஒரு புருஷனை மணந்துகொண்டு தங்களுடைய இவ்வுலக வாழ்க்கையை நடத்தவேண்டுமேயன்றித் தாங்கள் பால்ய விதவைகளாய் இருப்பதனால் இனி விவாகம் செய்துகொள்ளக்கூடாது

என்று நினைத்துக்கொண்டு, தங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ளத் தவறான துறைகளில் இறங்கலாகாது. வியபிசாரத்திற்குத் தகுந்த தண்டனை எல்லா மதங்களிலும் கடுமையாக விதிக்கப்பட்டிருக்கிறது. எனவே பால்ய விதவைகளனைவரும் ஆண்டவனுக்கு மாறான காரியத்தில் ஈடுபடாமல் விவாகம் செய்துகொள்ள முயற்சி எடுக்க வேண்டும். எவருக்கேனும் இவ்விஷயத்தில் எத்தகைய உதவி வேண்டுமாயினும் எங்கள் லாகூர் சபைக்காவது சென்னை கிளைச்சபைக்காவது எழுதிக்கொண்டால் உடனே தக்க உதவி புரியத் தயாராயிருக்கிறோம்."

இவ்வாறு நரேந்திரநாதசேனர் ஆங்கிலத்தில் செய்த உபந்நியாசத்தை அப்போதைக்கப்போது இதற்காகவே வேலூரினின்றும் அவருடன் அங்குப்போந்த சீனிவாசன் இனிய தமிழில் அப்படியப்படியே மொழிபெயர்த்து வந்தான். இப்பிரசங்கத்தைக் கேட்ட ஜானகிக்குத் தான் ஏன் மறுமுறை தன் காதலனாகிய சீனிவாசனை மணந்துகொள்ளக்கூடாதென்னும் எண்ணம் உதித்தது.

அன்றிரவு இவ்விஷயத்தைப்பற்றி மெதுவாகத் தன் மாதாவினிடம் கூறினாள். அவளுடைய தாயாரும் அவளைப் போல் பெண்மணியேயாதலின் பெண்களுடைய கஷ்டத்தை உணர்ந்தவளாதலால் தன் பதினான்கு, பதினைந்து வயதுள்ள மகளுக்கு மறுவிவாகம் செய்வதே சரி என்று நினைத்திருந்தாளாயினும் அது அவளுடைய குற்றமாகாது. ஆயினும் இவ்விஷயத்தை அருணாசல சாஸ்திரியாரிடம் துணிந்து கூற யாரும் முன்வரவில்லை. இவ்வாறு சிலநாட்கள் கழிந்த பின்னர் ஒருநாள் மாலை ஜானகிக்கும் அவள் தாயாருக்கும் அடியிற்கண்டவாறு சம்பாஷணை நடந்தது—

ஜானகி :—அம்மா ! அன்று நம் ஊரில் நடந்த பிரசங்கத்தில் அவ்வளவு கூறினார்களே ! என்னைப் போன்ற பால்ய விதவைகளுக்கு விவாகம் செய்வதனால் என்ன தோஷம் விளையப்போகிறது ? இரண்டு மூன்று குழந்தைகளைப் பெற்றவர்களும் புருஷனோடு இன்பமனுபவிப்பதுமட்டுமல்லாமல் சிலர் வெளியிலும் கள்ள புருஷனை நாடுகின்றனர். கற்புடைய ஸ்திரீ ரத்னங்களும் யுக்த வயதில் தங்களுடைய கணவன்மார்களுடன் கூடிக்குலாவ எத்தனையோ ஆவலுடன் காத்திருக்கின்றனர். மகா விகாரமான பெண்மணிகளும் தங்களுக்கேற்ற மன்மதனை ஆசிக்கின்றனர். மக்கள் தன்மையே இவ்வாறெனின் கேவலம் பெண் மிருகங்களும், ஆண் மிருகங்களின் சந்திப்பைப் பெரிதும் நாடுகின்றன. எனவே சரியான பக்குவமடைந்த பிராயத்தில், "தினைத்துணையு மூடாமை வேண்டும் பனைத்துணையுங் காமம் நிறைய வரின்" என்பதேபோல் இயற்கையாய் எழக்கூடிய புருஷ சேர்க்கையின் இச்சையானது உதயமாகும்போது அதைத் தீர்த்துக் கொள்ளத்தானே வேண்டியிருக்கிறது. மண், பெண், பொன் என்னும் மூவாசைகளையும் அறவேயொழித்த தபோதனர்களும் காமத்தினால் பீடிக்கப்பட்டு, தகாத காரியங்களைச் செய்துவிடவில்லையா ? விஷயம் இவ்வாறிருக்கும்போது நான்மட்டும் எவ்வாறு இந்த வயதில் எனக்கேற்ற மன்மதனின்றிக் காலத்தைக் கழிப்பது ? இன்னும் எத்தனைநாள் இப்படி வாழ்வேன் ? சீக்கிரமாக மரணமேனும் சம்பவித்தால் அப்பரலோகத்திலுள்ள இறைவனிடமேனுஞ் சென்று இவ்விகலோகத்தில் ஆண்பாலார் பெண்வர்க்கத்தாருக்கிழைக்

கும் கொடுமையைப்பற்றி முறையிட்டுக்கொள்வேன். என் தகப்பனாரோ காதிருந்தும் என் விஷயத்தில் செவிடராகவே இருந்துவருகிறார்.

தாயார் :—ஜானகி ! இதற்கென்ன செய்வது ? இதுவும் தலை விதிதான். உனக்கு அதிருஷ்டமிருந்தால் உன் கணவனே பிழைத்திருக்கக்கூடாதா ? கணவன் இறந்த பிறகு எப்படிக் கலியாணம் செய்வது ? அநுஷ்டானத்திலில்லாத ஒரு வழக்கத்தை நாம் மட்டும் எவ்வாறு அநுஷ்டித்தல் இயலும்? அதிலும் உன் தந்தையார் வைதிக நோக்கமுடையவர். எத்தனையோ பெண்கள் விதவைகளாக இருந்துவருவதில்லையா ?

ஜானகி :—என்ன அம்மா இருப்பது? என்னுடைய தோழிமார்களெல்லாம் அவரவர்களுடைய புருஷனுடன் கூடி இன்பமாகக் காலத்தைக் கழிக்கும்போது நான் மட்டும் இவ்வீட்டில் தனியே காலங்கழிப்பதா? என்னைப்போன்ற பால்ய விதவைகளுள் எத்தனை பேர்கள் தன்னடக்கத்துடன் இருக்கிறார்கள் ? அதோ பக்கத்துத் தெரு கிருஷ்ணராயர் பெண் சுந்தரி வீட்டிலும் சொல்லாமல் நம்மூருக்கு வந்த நாடகக்காரர்களுடன் ஓடிப்போய்விட்டாளாம் ! வக்கீல் ராஜகோபாலய்யங்கார் பெண் அமிர்தவல்லியோ தன் மாமனுடன் ரகசியமாய்க்கூடி கர்ப்பமாய்விடவே அதை அழிக்க எவ்வளவோ முயன்றும் முடியாமல் கர்ப்பம் முதிர்ந்து குழந்தை பிறந்துவிட்டதால் அக்குழந்தையை நம்மூர் மலையடிவாரத்தில் கழுத்தை முறித்து எறிந்துவிட்டுச் சிசுஹத்தி செய்ததாக ஊரெல்லாம் இரகசிய வதந்தியாயிருக்கிறது. அடுத்த தெரு குலசேகர

நாயுடுவின் குமாரி மோகனம் தன் தகப்பனார் இறந்துவிடவே அவளை யாரும் கேட்பாரில்லாமல் அவள் இரகசிய வியபிசாரத்தில் சம்பாதித்தே தன் சாதாரண வீட்டை மாடி வீடாக்கிவிட்டாள். அதற்கென்ன? யாரோ ஆயிரத்திலொருவர் கற்புடையவராகவும் இருக்கலாம். அப்படிப்பட்டவரும் என்னைப்போல் இவ்வளவு இளமங்கைகளாயிருந்தால் தன்னடக்கத்துடன் இருக்க முடியவே முடியாது.

தாயார் :—என் கண்மணியே! நீ இவ்வளவு படித்தவளாயிருக்கிறாயே? நீயாவது பொறுத்துக்கொண்டிருக்கலாகாதா? நீ அப்படியெல்லாம் செய்து உனக்கும் நம் குடும்பத்துக்கும் ஒரு இழிவான பெயரைக் கொண்டுவரவேண்டாம். என்ன செய்வது? நானும் என்னாலானவரை உன் தந்தையாரிடம் சொல்லிப் பார்க்கிறேன். அவர் மறுவிவாகம் செய்ய மறுத்துவிட்டால் நீ பொறுமையுடன் இருந்துவிடுவதே நலம்

ஜானகி :—நானென்ன படித்தவள்? பெரிய பெரிய மகான்களெல்லாம் காமபாணத்தால் வருந்தி வழிதவறிய போது 'பெண்ணறிவென்பது பெரும்பேதமைத்தே' என்பதுபோல் பேதையாகிய யான் எம்மாத்திரம்? நான் புருஷசேர்க்கையின் ஞாபகமின்றியே இருந்து வந்தபோதிலும் இக்காலத்தில் என்னைச் சுற்றி நடைபெறுவதெல்லாம் சிற்றின்ப சம்பந்தமாகவே நடந்து வருவதால் அவை என் சித்தத்தைக் கலக்கிவிடுகின்றனவே. சரி; அப்பா வரும் வேளையாயிற்று. நான் தலையில் கையை வைத்துக்கொண்டு அழுத கண்ணும்

சிந்திய மூக்குமாயிருந்தால் அவர் கோபிப்பார். ஏதோ சொல்லிப்பார். அவர் மனமிரங்கினல் சரி. இல்லா விட்டால் கடவுள் விட்ட வழி ஆகிறது.

ஜானகி இவ்வுரைகளைச் சொல்லி முடிக்கு முன்னரே வக்கீல் அருணசல சாஸ்திரியார் தாம் அன்று கோர்ட்டில் நடந்துகொண்ட மரியாதைக் குறைவுக்காக முனிசீப் கோபித்துக் கொண்டு அதனல் அவமானமடைந்தவராயும், கக்ஷிக்காரர்கள் தம்முடைய வக்கீல் சரியாகக் கிராஸ் செய்யவில்லை யென்று குறை கூறியதனல் அவர்களைச் சமாதானப்படுத்திய மனோவேதனை அடைந்தவராயும் வீட்டில் நுழைந்தார். அப்போது அவருடைய செவியில் ' இல்லாவிட்டால் கடவுள் விட்ட வழியாகிறது ' என்னும் ஜானகியின் சொல் நாராசம் காய்ச்சி ஊற்றியதே போல் நுழைந்தது. உடனே அவர் " இந்தப் பெண்களுக்குக் கொஞ்சம் படிப்பு வந்தால் இப்படித்தான். இல்லாத வேதாந்தமெல்லாம் பேசுவார்கள். அதிலும் அன்று இந்த ஊரில் விதவா விவாகப் பிரசங்கம் நடந்தது முதல் நமது ஜானகியின்பாடு தலை கால் தெரியாமலிருக்கிறது. யாரோ ஆசாரங்கெட்ட அயோக்கியர்கள் உளறிவிடுவதனலேயே நாமெல்லாம் அப்படியே செய்துவிடமுடியுமா ? இஷ்டமிருந்தால் பார் ; இல்லாவிடில் உன் இஷ்டப்படி செய்துகொள் " என்று கடுங்கோபத்துடன் சொன்பாரி பொழிந்தார். இதைச் செவியுற்ற ஜானகி தன் தலைவிதியை நொந்துகொண்டு கண்ணீர் சொரிந்தவளாய்ப் பின்கட்டுக்குச் சென்றாள்.

ஏழாம் அத்தியாயம்.

ஜானகி எங்கும் காணோம்.

ஜானகி இவ்வாறு தன் காலத்தைக் கழித்துவந்தாள். அப்போது அவளுடைய வீட்டின் எதிர் வீட்டிலிருந்த ரைஸ் மில் சபாபதி முதலியாரின் குமாரன் கதிர்வேலு என்பவன் மகா போக்கிரியாதலின் பால்ய விதவையாகிய ஜானகி மாரன் வாதனையைப் பொறுக்கமாட்டாமல் புத்தி தடுமாறி யிருப்பாளென்றும், தான் பிரயத்தனப்பட்டால் தன் விருப்பத்திற்கு அவள் இசைவாளென்றும் மனப்பால் குடித்துக்கொண்டிருந்தான். அவன் அடிக்கடி தன் வீட்டு மாடி அறையிலிருந்து ஜானகியையே கவனித்துக்கொண் டிருந்து அவள் தனிமையாக இருந்தால் அவளைக் கண்டு சிரிப்பதும், ஜாடை காட்டுவதும், மற்றும் குறும்புகளைச் செய்வதும் வழக்கம். ஒருநாள் அவன் ஜானகி தனியே தன் அறையில் உட்கார்ந்திருப்பதை அறிந்து தெரு வழியே போகும்போது ஒரு சிறு கடிதத்துண்டை அவளுடைய அறையின் ஜன்னல் வழியாகப் போட்டுவிட்டான். அந்த அற்பனுடைய மனப்பான்மையை நன்கு அறிந்த ஜானகி அக்காகிதத் துண்டைக் கரத்தால் தீண்டவும் விரும்பவில் லையாயினும் அதில் என்னதான் எழுதியிருக்கிறது பார்ப் போமென்று எடுத்துப் பிரித்தாள். அதில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருந்தது :—

என் மனத்தைக் கொள்ளைகொண்ட கிளியே !

நீ ஏன் இந்த யௌவன வயதில் உனக்கேற்ற ஜோடி இல்லாமல் அழவேண்டும்? நீ விரும்பினால் நான் ஆயி ரக்கணக்கான தொகையைக் கொண்டு வருவேன். வெளி நாடுகளுக்குப் போயேனும் நாமிருவரும் ரதி யும் மன்மதனும் போல் காலங்கழிக்கலாம். உனக்கு

இஷ்டமிருப்பின் நாளை மாலை 5-மணிக்கு என்னைக் கோவிலில் நூறுகால் மண்டபத்தில் சந்திப்பாயென்று நம்புகிறேன்,

உன் பிரியன் : நீயே அறிவாய்.

இதைக்கண்டு ஜானகி இந்த அற்ப நாய்க்கு இத்தனை அகங்காரமா? இவனைப்போன்ற துஷ்டர்களுக்கு எல்லாம் வல்ல இறைவனே கூலி கொடுத்தல்வேண்டுமென்று சிந்தித்துக்கொண்டு இவன் இன்னும் ஏதேனும் தொந்தரை செய்தால் என்ன செய்வது? இந்த வெட்கக்கேட்டை யாரிடம் சொல்லிக்கொள்வது என்று விசனப்பட்டாள்.

இவ்வாறிருக்கும்போது அவ்வூரில் வழக்கம்போல் பெயர் பெற்ற கார்த்திகை தீபம் சமீபித்தது. கொலை, களவு, கள், காமம், முதலிய துர்க்கிருத்தியங்களைச் செய்பவர்கள் தங்கள் தொழிலைப் பெருவாரியாகச் செய்வதற்கு ஒரு நற் சமயம் ஏற்பட்டதென்று சந்தோஷித்தனர். இற்றை நாளில் உற்சவம், உற்சவமென்று பெருந் திரளான கல்வியில்லா மாக்கள் ஒன்று கூடுகிறார்களே யொழிய உற்சவம் எந்நோக்கத்தைக்கொண்டு ஏற்பட்டதோ அந்நன்னோக்கம் இறந்துபட்டது. கோவிலுக்கு எந்தத் தாசி வருகிறாள் பார்ப்போம் என்று போகிறவர் சிலர்; எந்த மேளக்காரன் வருகிறானோவென்று செல்பவர் சிலர்; நல்ல சமாராதனை நடக்கும் நன்றாகச் சாப்பிடலாமென்று ஓடுபவர் சிலர்; கூட்டம் அதிகமாக இருக்கும் எளிதாகத் திருடலாமென்று வருபவர் சிலர்; அநேக இளங் கன்னியர்கள் வருவார்கள் அவர்களைக் கூட்டத்தில் இடித்துக்கொண்டு போகலாம் என்று வரும் வாலிபர் பலர். இவ்வாறாகப் பெருந்திரள் உற்சவத்திற்குக் கூடுகிறதேயன்றி உண்மையான பக்தி

யுடன் செல்பவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். தெய்வ பக்திக்காக ஏற்பட்ட கோயில்கள் இன்று வியபிசாரத்திற்கும், கொலைக்கும், களவுக்கும் நிலைக்களனுகவல்லவோ மாறிவிட்டன. இதனுல்தான் 1300 வருஷங்களுக்கு முன்னரே இஸ்லாம் விக்கிரஹ ஆராதனையைக் கண்டித்திருக்கிறது. இப்போது ஆரிய சமாஜிகள் முதலியவர்களும் அதை நிறுத்திவிட்டதாகத் தெரிகிறது. ஆதலின் கதிர்வேலும் தன் எண்ணத்தை முடித்துக்கொள்ள அந்த கார்த்திகை தீபமே சரியான சமயமென்று காத்திருந்தான்.

இக்காலத்தில் இத்தகைய உற்சவங்களை நடத்துவதற்குப் பெருவாரியான பொருளைச் செலவிடுவதைக் காட்டிலும் பாமர மக்களுக்கு தேசீய ஞானத்தை ஊட்டக்கூடிய கல்வியைக் கற்பிப்பதிலேனும், தேசத்தின் பொருளாதார நிலைமை சீர்திருந்துவதற்குரிய நாட்டுத்தொழிலை அபிவிருத்தி செய்வதிலேனும் அத்திரவியத்தைச் செலவிடலாகாதா? இவ்வாறு உற்சவங்களுக்குச் செலவிடுவதானது, ராஜீயத் தலைவர்களென்போர் மகாத்மா காந்தியடிகளின் மனம் திருப்தியடையும் வண்ணம் மிகுதமான கதர் உற்பத்தி செய்வதிலும், தீண்டாதார் முதலிய தாழ்த்தப்பட்டவர்களின் நிலைமையை உயர்த்துவதிலும் தங்கள் திரவியத்தைச் செலவிடாமல் சட்டசபை முதலான அன்னிய ஆதிக்யத்திற்குட்பட்ட ஸ்தாபனங்களுக்குச் செல்லும்பொருட்டுத் தேர்தல் விழாக்களுக்காக ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவிடுவதைப்போலத்தானிருக்கிறது. தேச விடுதலைக்காகப் போராடும் இக்காலத்தில் ஒற்றுமையை வளர்க்கக்கூடிய பாரதமாதாவின் ஆலயத்தைக் கட்டி, ஒழுக்க சீலர்

களைக்கொண்டு தேசீய பஜனை ஊர்வலங்கள் நடத்தலாகாதா பாரத தேவியே ! உன் மக்களுக்கு எப்போது தான் உன் கவலை தெரியப்போகின்றதோ ?

கார்த்திகை தீப உற்சவத்தின் வெள்ளித் தோன்று மாலை 6-30-மணிக்குத் திருவண்ணாமலை கோவிலின் பின் புறக்கோபுரத்தின் சமீபத்தில் ஒரு கூட்டத்தில் நின்று கொண்டிருந்த ஒரு நங்கையின் கரத்தைத் திடீரென்று பின்புறமாக வந்த வாலிபனொருவன் இறுகப் பிடித்துக் கொண்டான். அதைக்கண்ட பெண் திகிலடைந்து தனக்குள், "மதிமோசம் போய் இந்தப்பாட்டியுடன் இவ்வளவு தூரம் வந்துவிட்டோமே ; இச்சண்டாளன் கையிலிருந்து எப்படியாவது தப்பவேண்டும்" என்று நினைத்துக்கொண்டு தன்னருகில் நின்றுகொண்டிருந்த ஒரு வயோதிக மாதினிடம் "மணி ஆய்விட்டதே ; இனி இங்கு இருக்கலாகாது. வீட்டுக்குப் போவோம்" என்றாள். அதைக்கேட்ட கதிர்வேல் "ஓகோ ! இப்பெண்ணுக்கு அம்மாது உறவினள் போலும் ! நாம் மரியாதையாகத் தூரம் விலகாவிடில் அபாயம் வரும்" என்று நினைத்துக்கொண்டு தான் பற்றிய கரத்தை மெல்ல நழுவவிட்டுவிட்டுத் தூரம் சென்றான். ஜானகியும் அந்தப் பாட்டியுடன் ஜாக்கிரதையாகத் தனதில்லம் போய்ச் சேர்ந்தாள்.

அன்றிரவு படுக்கையில் அன்றுமாலை நடந்த விஷயமே அவளை அதிகமாக வருத்திற்று. இன்னமும் அந்தப் பாவி என்னசெய்வானோவென்று அஞ்சினாள். "வீட்டிலோ மறுவிவாகம் செய்வதில்லை ; நமக்கும் இவ்வாழ்க்கை கஷ்டமாய்த்தானிருக்கிறது. எதிர் வீட்டுப் பையனும் நம்மை எளிதில் விடமாட்டான்போலிருக்கிறது. இதை யாரி

டத்தில் முறையிடுவது? ஆதலின் எங்கேனும் மறைந்து விடுதலே நலம்" என்று யோசித்தாள். தீபத்திற்கு அடுத்த நாளும் இவள் வழக்கம்போல் கோவிலுக்குச் சென்றாள். ஆனால் இரவில் வீட்டுக்குத் திரும்பவேயில்லை. இரவு மணி எட்டு அடித்தது; பெண்ணைக்காணோம். ஒன்பதும் அடித்தாயிற்று; இல்லை. உடனே அருணாஜல சாஸ்திரியாருக்குக் கோபம் பொங்கிவழிந்தது. மகளைத் தனியே கோயிலுக்கு அனுப்பியதற்காகத் தம் மனைவியைக் கண்டித்தார். புருஷனும் மனைவியுமாக எங்கெங்கும் தேடிப்பார்த்தனர். அகப்படவில்லை. காலையில் வருவாளென்று நினைத்தனர். காலையிலும் வரவில்லை. மறுநாள் அவ்வூருக்கு வந்திருந்த வெளியூர்வாசிகளெல்லோரும் அவ்வூரைவிட்டுப் புறப்பட்டுச் சென்றார்கள். அப்போதும் ஜானகி வீடு திரும்பியபாடில்லை. அவள் ஏதேனும் கிணற்றில் விழுந்து தற்கொலை புரிந்துகொண்டாளோவென்று சந்தேகித்து அவ்வூரிலுள்ள எல்லா பாழுங் கிணறுகளிலும் தேடிப்பார்த்தனர். அகப்படவில்லை. புருஷனும் மனைவியும் ஆற்றொணாத் துயரத்தை யடைந்தனர். ஆனால் ஜானகிமட்டும் தற்கொலை செய்துகொள்ளக்கூடிய அவ்வளவு விவேகமற்றவளாய் இருக்கவில்லை.

எட்டாம் அத்தியாயம்

விதவையின் துயரங்கள்

ஜானகி எங்கும் காணமற்போன மறுநாள் காலை 6-மணிக்கெல்லாம் சென்னைக்கடுத்த பேஜின் பிரிட்ஜ் ஜங்ஷனில் டிக்கட் பரிசோதகராகிய ஓர் ஆங்கிலோ இந்தியர் ஒரு யௌவனப் பிராயமுள்ள இளநங்கையை வண்டித்

தொடரினின்றும் கீழே இறங்கிவிடும்படி கடுமையாகக்கட்டளையிட்டார். அதைக்கேட்ட அப்பெண் இன்னதுசெய்வதென்று தோன்றாமல் ஆண்டவனைச் சிந்தித்தவண்ணம் கண்ணீர் சொரிந்தவளாய் "நான் ஏன் கீழே இறங்கவேண்டும்? நான் செய்துவிட்ட குற்றம்தான் இன்னதென்று சொல்லுங்கள்" என்று வாய்விட்டு மெதுவாகக் கேட்டாள். அதற்கு அவர் "யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்? பாசெஞ்சர் டிக்கட் வாங்கிவிட்டு ஏன் மெயிலில் வந்தாய்? இதற்கு சார்ஜ் 2 ரூபா கட்டவேண்டும்" என்று மிரட்டினார். பார்த்தாள் அவள்; வீட்டிலும் சொல்லாமல் தன்னிடமிருந்த சில்லரையுடன் புறப்பட்டுவந்தவள் காட்பாடியில் தெரியாமல் மெயிலில் ஏறிவிட்டாள். டிக்கட் வாங்கிய பின்னர் அவளிடமிருந்ததெல்லாம் பத்து அணாதான் டிக்கட் பரிசோதகரோ 2 ரூபாய் வேண்டுமென்கிறார்; யாதுசெய்வாள் பாவம்! பாசெஞ்சர் டிக்கட்டுக்கும் மெயில் டிக்கட்டுக்கும் வித்தியாசம் மூன்று அணாதான். அதற்கு இரட்டிப்பாக ஆறு அணா கொடுக்கவேண்டியதற்குப் பதிலாகத் தன்னிடமுள்ள பத்து அணாவையும் கொடுத்தாலும் அவர் வாங்கமுடியாதெனக் கண்டிப்பாகக் கூறிவிட்டார். அப்பெண் துக்கத்துடன் யோசித்துக் கொண்டு நின்றபோது இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த ஒருகனவான் அப்பெண்ணின் சார்பாகப் பேசிக் கடைசியில் தன்னிடமிருந்த ஒரு ரூபாயை டிக்கட் பரிசோதகருக்குக் கொடுத்து அனுப்பிவிட்டார். அரக்கோணத்திலிருந்து அக்கனவானும் அதே வண்டியில் வந்தும் அப்பெண்ணுடன் பேசாமலிருந்தவர், சகாயம் செய்ததைக் காரணமாகக் கொண்டு அவளருகில் சென்று

உட்கார்ந்து அவளது விருத்தாந்தத்தை விசாரித்தார். அவருடன் பேச அவள் மிக்க சங்கோசமடைந்தாளென்றாலும் அவர் சுமார் 40 வயதுக்கு மேற்பட்டவராயிருந்ததால் அவரைத் தந்தைபோல் பாவித்துப் பேசலானாள். ஆனால் உண்மையை உரைக்க விரும்பாமல் தான் பெங்களூரிலிருந்து வருவதாகவும், திக்கற்றவளென்றும், விதவையென்றும் கூறிக்கொண்டாள்.

அந்தக் கனவான் சென்னையில் ஏகாம்பரேஸ்வரர் அக்கிராரத்தில் வசிப்பவர். வயதானவராயினும் காம விகாரத்தில் சிறந்தவர். அவருக்கு மனைவியில்லை. விதவையான தன் தமக்கையுடன் வசிப்பவர். கையிலிருந்த ரொக்கத்தை வீடுகளின்மீது கடன் கொடுத்துவிட்டு அதன் வட்டியைக் கொண்டு சுகமாகக் காலங்கழிப்பவர். அவர் அப்பெண்ணைத் தன்னுடன் வந்து தனது வீட்டில் தங்கும்படியும், சொற்ப தினங்களுக்குள் அவளைத் திக்கற்ற பெண்களுக்குப் படிப்பு சொல்லும் சேவாசாதனம் போன்ற தர்மஸ்தாபனங் களில் சேர்த்துவிடுவதாகவும் மிக இரக்கமுள்ளவர்போல் சொன்னார். அவளும் அதை நம்பி அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டாள். இதற்குள் ரெயிலும் புறப்பட்டு சென்ட்ரல் ஸ்டேஷனையடைந்தது. அப்பெண் முன்பின் சென்னையைப் பார்த்ததில்லையாதலால் சென்ட்ரல் ஸ்டேஷனைப் பார்த்த போதே அவள் பிரமித்துவிட்டாள். சாதாரணமாக ஸ்டேஷனிலிருந்து வீட்டிற்கு நடந்து செல்லும் வழக்கமுடைய கிஷ்டசாமி ஐயர் அன்று தன்னுடன் வரும் பெண்ணுக்காக வீடுவரையில் ஜட்கா வண்டியொன்றை அமைத்துக்கொண்டார். வழியில் போகும்போது அவர் அவள் பெயர் என்னவென்று கேட்க, அவளும் தன் பெயர் மரகதம்

என்று சொல்லிக் கொண்டாள். அவர்களிருவரும் வீடு போய்ச் சேர்ந்ததும் கிஷ்டசாமி ஐயரின் தமக்கை, தன் சகோதரனுடன் யாரோ ஒரு பெண் வந்திருப்பதைக்கண்டு ஆச்சர்யமடைந்தாள். பிறகு விசாரித்ததில் உண்மை தெரிந்தது.

மரகதமும் கிஷ்டசாமி ஐயர் வீட்டில் ஐந்தாறு நாட்கள் தங்கிவிட்டாள். அவர் அவளைத் திக்கற்ற பெண்கள் விடுதியில் சேர்க்க எத்தகைய முயற்சியும் செய்யவில்லை. ஒருநாள் அவள் அதைப்பற்றி விசாரித்தபோது அவர் சரியாகப் பதில் சொல்லாமல் மழுப்பிவிட்டார். அன்றிரவு சுமார் பன்னிரண்டுமணிக்கு கிஷ்டசாமி ஐயர் தன் படுக்கையினின்றும் மெதுவாக எழுந்து மரகதம் படுத்திருக்குமிடம் சென்று அவளை எழுப்பினார். அவள் அந்தப் பிராமணனின் கெட்ட எண்ணத்தை யூகித்தறிந்துகொண்டு, தூக்கத்தில் பயந்து கத்துபவள் போல் "ஐயோ! யாரோ திருடன் என்று கூச்சலிட்டாள். இதனால் வீட்டில் பலரும் விழித்துக்கொண்டதால் ஐயரும் ஒன்றுந் தெரியாதவர் போல் மற்றவர்களுடன் அவளுக்குச் சமாதானம் கூறிவிட்டு அங்குமிங்கும் யாரேனும் இருக்கிறார்களா என்று தேடிப்பார்த்தார். இறுதியில் அவள் ஏதேனும் கனவுகண்டிருப்பாளெனச் சொல்லி அனைவரும் படுத்துக்கொண்டுவிட்டனர். மரகதத்திற்குமட்டும் தூக்கம் வரவில்லை. தன்னைத் தந்தைபோல் ஆதரிப்பதாக வாக்களித்த ஒரு பிராமணன் இப்போது இரக்கமில்லாமல் இவ்வாறு செய்ததைக் கண்டு ஏமாற்றமும், துக்கமும் அடைந்ததுடன் இனிமேல் அங்கு ஒரு நிமிஷமும் தங்கலாகாதென முடிவுசெய்தாள்.

ஆகவே அவள் மறுநாள் விடியற்காலை ஐந்துமணிக்கெல்லாம் எழுந்து அவ்வீட்டுக் கதவைத் திறந்துகொண்டு

வெளியே புறப்பட்டுவிட்டாள். அவள் எட்டுமணி வரையில் ஒரு சத்திரத்துத் திண்ணையில் படுத்திருந்து, பிறகு வெளியில் செல்ல முயற்சித்தாள். ஆனால் அவளுக்கு சென்னையில் ஒரு இடமுந் தெரியாது. எங்கு செல்வது ? என்ன செய்வது ? என்று ஒன்றுந் தோன்றாமல் சைனா பஜார் வழியாகச் சென்று பிராட்வேயில் திரும்பினாள். அங்கு ஒரு கட்டடத்தின்மீது "விதவா விவாக சகாய சபை" என்று ஒரு போர்ட் போடப்பட்டிருந்தது. அதைக் கண்டதும் அவளுக்குச் சென்னையில் விதவா விவாக சகாய சபை ஒன்று இருக்கிறதென்பதும், அவர்கள் விதவைகளுக்குத் தக்க உதவி செய்வார்களென்பதும் ஞாபகத்திற்கு வரவே அவள் அம்மாடியின்மீது ஏறினாள். ஆறும் வகுப்பு வரை படித்திருந்தாலும் கூட, அவள் பெரிய இடத்தில் பிறந்து வளர்ந்தவளாதலாலும், பெண்களுக்கு இயற்கையான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நால்வகைக் குணங்களும் அவளிடம் ஒருங்கே அமையப்பெற்றிருந்ததாலும் முன்பின் தெரியாத ஆடவர்களுடன் பேசுவதற்கும் அவள் சங்கோசமடைந்தாள். ஆயினும் சமய சந்தர்ப்பங்கள் தான் மனிதர்களை அனுபவசாலிகளாக்குவதால் அவளுடைய நிலைமையும், அவளை வெட்கத்தை விட்டுத் தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ளும்படி தூண்டியது. அவள் மாடியின்மீது ஏறி வந்ததைக் கண்ட அச்சபையின் காரியதரிசி ஸ்ரீ சின்னையா அவர்கள், இரக்கத்துடனும், சகோதரவாஞ்சையுடனும் அவளைக் கண்டு "சகோதரியே! நீங்கள் யார்? இவ்விடம் எங்கு வந்தீர்கள் ? என்று இனிய குரலில் கேட்டார். அதற்கவள் தான் பெங்களூரைச் சேர்ந்தவள் என்றும், திக்கற்றவளென்றும், தன் பெயர் மரகதம் என்றும், தான் பால்ய விதவையாதலால் இச்சங்கத்தின் ஆத

ரவில் இருந்துகொண்டேனும் மறுமணம் புரிந்துகொள்ள லாமென விரும்பி அங்கு வந்திருப்பதாகவும், விஷயங்களை ஒருவாறு மறைத்துக் கூறினாள்.

காரியதரிசியும் அப்பெண்மணியினிடம் அனுதாபங் கொண்டு அவளுக்கு உடனே ஆகாரத்தை வரவழைத்துக் கொடுத்து, சென்னை நகருக்கருகில் ஷை சபையினரால் கட் டப்பட்டிருக்கும் கங்காராம் விதவைகள் விடுதிக்கு அனுப்பி வைத்தார். மரகதம் சபையின் ஆதரவில் காலந்தள்ளி வரு கையில் பிரதிதினமும் இறைவனை நோக்கி, "விரும்பு வார்க்கு விரும்பியதை அளித்துக் காக்கும் கிருபாமூர்த் தியே! நான் இவ்வுலகில் பெண்ணாய்ப் பிறந்து பட்டபாடு களையெல்லாம் நீயும் பார்த்துக்கொண்டிருக்கிறாயே! இன் னமுமா இந்த ஏழையின்மீது மனமிரங்கலாகாது? நான் பலகாலமாகவே மனமார நேசித்துவரும் என் காதலனாகிய சீனிவாசனை நான் பெறும் பாக்கியத்தை எனக்கு அளிக் கக்கூடாதா? நான் என் கற்பைக் காப்பாற்றிக்கொண்டது உண்மையானால், நான் சீனிவாசனை மனமார நேசிப்பது சத்தியமானால், உண்மைக் காதல் என்பது ஒன்று உண் டென்றால் நான் என் காதலனையே பெறும்படி நீ கிருபா கடாக்ஷம் புரியவேண்டும்" என்று பிரார்த்தித்துவந்தாள்.

ஒன்பதாம் அத்தியாயம்.

காதலன் காதலி சந்திப்பு.

திருவண்ணாமலையிலிருந்து ஜானகி எங்கேயோ போய் விட்டாள் என்று கேள்விப்பட்ட நமது சீனிவாசனும், "அவள் என்ன செய்வாள் பாவம்! பெற்றோர்கள் அவள்

வாழ்க்கையைப் பாழாக்கினார்கள். அவளிடம் அவர்களுக்கு அன்போ, விசுவாசமோ இல்லாமற் போகவில்லை. ஆயினும் பெற்றோர்களின் அறியாமையும், மூடப்பழக்க வழக்கமும் தாராள நோக்கமின்மையும் ஜானகியின் இன்ப வாழ்க்கையில் குறுக்கிட்டுவிட்டன. அவள் தற்கொலை செய்து கொண்டாளோ அல்லது எந்த வஞ்சகப் பையலின் மாய வலையில் சிக்கி ஏமாற்றமடைந்து அவதிபுறுகின்றாளோ, தெய்வமே அறியவேண்டும். எனக்கும் வயதாய்விட்டது குடும்ப விஷயங்களைக் கவனிக்கத் துணைவி ஒருத்தி அவசியமாயிருக்கிறது. ஆனால் பால்ய விதவையை மணந்து கொள்வதுதான் தற்கால இளைஞர்களின் கடமை என்பதை உணர்ந்த நான் பாலிய விதவையாயும், அதிலும் திக்கற்றவளாயும் உள்ள பெண்ணைப் பார்த்துத்தான் விவாகம் செய்துகொள்ளவேண்டும்" என்று தீர்மானித்தான்.

சீனிவாசன் இவ்வாறு தீர்மானித்த இரண்டொரு தினங்களுக்குப் பின் ஒருநாள் பத்திரிகையில் "திக்கற்றவளும் சுமார் பதினேழு வயதுடையவளும், ஆறும் வகுப்புவரை படித்தவளும், தமிழ் பிராமண வகுப்பைச் சேர்ந்தவளுமான பால்ய விதவையை மணந்துகொள்ள விருப்பமுள்ள அதே வகுப்பைச் சேர்ந்த ஆடவர் நமக்கு எழுதிக் கொள்ளலாம்" என்று சென்னை விதவா விவாக சகாய சபையார் விளம்பரம் செய்திருந்ததைக்கண்டான். அவன் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டு காலதாமதஞ் செய்ய விரும்பாமல் நேராகச் சென்னைக்குப்புறப்பட்டான். அவனுக்குச் சென்னை நகரமும் புதிதல்ல, விதவா விவாக சபையாரும் புதியவரல்லர். அவன் சென்னையில் இதர வேலைகளை முடித்துக்கொண்டு இறுதியில் விதவைகள் விடு

திக்குச் சென்று, அச்சபையார் விளம்பரப்படுத்தியிருந்த பெண் யாரென்று விசாரித்தான். அவன் அச்சபையின் அபிவிருத்திக்காக அதிகம் உழைத்திருப்பதாலும், அவன் நற்குண நற்செய்கைகளுடன் கூடியவனென்பதைச் சபையினர் அறிவார்களாதலாலும் மரகதத்தைக் கண்டு பேச அவனுக்கு அனுமதி கொடுத்தனர். மரகதம் என்னும் அப் பெண்ணைக் கண்டதும் சீனிவாசன் ஆச்சரியமடைந்தான்· தன் அத்தை சரஸ்வதியம்மாளின் குமாரியாகிய ஜானகியே அவள் என்பதை அறிந்துகொண்டான். அவளும் தன் காதலன் சீனிவாசனைக் கண்டு புளகாங்கிதமடைந்தாள். இருவரும் அன்பின் மிகுதியால் மெய் மறந்து ஒருவரை யொருவர் மார்புறத் தழுவி ஆலிங்கனஞ் செய்துகொண்டார்கள். ஆனந்த பாஷ்பம் அவர்களுடைய கண்களினின்றும் ஆறாய்ப் பெருகியது. நீண்ட நேரம் வரை பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஜானகியின் மறுவிவாகம்.

காதலர்களிருவரும் இவ்வாறு சந்தித்த ஒரு வாரத்திற்கெல்லாம் அதே சங்காராம் விடுதியில் விதவா விவாக சகாய சபையின் ஆதரவில் ஜானகிக்கும் அவளது மனமொத்த காதலனாகிய சீனிவாசனுக்கும் விவாகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. விதவா விவாகத்தில் ஊக்கங் கொண்ட ஸ்ரீமதிகள் வெங்கடசுப்பராவ், முத்துலட்சுமி ரெட்டி, விசாலாக்ஷி அம்மாள் முதலிய மாதுசிரோமணிகளும் மற்றும் பல கனதனவான்களும் வந்திருந்து தம்பதிகளை ஆசீர்வதித்தனர். ஆரிய சமாஜ முறைப்படி விவாகச்

சடங்கு நடைபெற்றது. மணமக்கள் மகாத்மா காந்தியடிகளின் மனம் குளிரும்படி பரிசுத்தமான கதராடைகளை அணிந்திருந்தார்கள். சீனிவாசனுடைய நண்பர்கள் பலர் வேலூர் முதலிய பல இடங்களிலிருந்தும் விஜயஞ்செய்திருந்தனர். ஜானகியின் பெற்றோர்களான அருணாசல சாஸ்திரியாரும், சரஸ்வதியம்மாளும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. தன் குமாரி சிறுவயதில் கணவனை இழந்தும் மற்ற பெண்களைப்போல் தவறான வழியில் சென்று விடாமல் கற்பைக் காத்துக்கொண்டு ஒரே பிடிவாதமாய்த் தான் காதலித்த சீனிவாசனை மணந்துகொள்வதனால்தான் சாஸ்திரியாரும் மனம் மாறி அந்த மறு விவாகத்திற்கு வந்தார். பெற்றோர்களைக் கண்ட ஜானகி மிக்க சந்தோஷமடைந்தாள். அதுதான் தமிழ் நாட்டுப் பிராமணர்களிடையே நடைபெற்ற முதலாவது விதவா விவாகமாகும். ஜானகி தன் அன்பிற்குகந்த மணாளனை சீனிவாசனுடன் திருவண்ணாமலைக்குச் சென்று சொற்ப காலம் இருந்த பின்னரே வேலூருக்குச் சென்றாள். விதியால் பிரிக்கப்பட்ட காதலர்களிருவரும் மதியினால் ஒன்று கூடி எல்லாம் வல்ல இறைவனருளால் இன்பமாகத் தங்கள் வாழ்நாளைக் கழித்தார்கள்.

வந்தேமாதரம்.

உயர்ந்த தினுசு டாய்லெட்டுகளையும் சோப்புகளையும்,
இந்தியாவிலும் தயார் செய்ய முடியும் !

— அதை —

கங்கா டாய்லெட்டும், சோப்பும்

நன்றாக நிரூபித்துக்காட்டும்.

கங்கா காவோ சாண்டல்வுட், காவோ ஸ்பெஷல்
டாய்லெட் சோப்புகள், வானிஷிங் கிரீம்,
கூந்தல் தைலம், (பக்குயட், ரோஸ், ஜாஸ்மின்)
இவைகளை எப்பொழுதும் உபயோகியுங்கள்.

நாங்கள் இன்னும் எங்கள் ஸ்பெஷல் தயாரிப்புகளாகிய
மார்கோசா, கார்போலிக், லைசால், தைமால்
சோப்புகளையும்
உங்களுக்கு சிபார்சு செய்கிறோம்.

இவைகள் தேகத்தின் மேலுள்ள சொரி, நமைச்சல் முதலிய சர்ம உபத்திரவத்தை விலக்கி தேகத்தைப் பாதுகாப்பதில் மிகவும் மேன்மை பெற்றவை.

கங்கா ஒர்க்ஸ்.
146/148, ராசப்ப செட்டி தெருவு,
பார்க்டவுன், மதறாஸ்.